பக்கங்கள்-16 | 12.புரட்டாசி.2021 | விலை-30.00




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -355




## இலங்கை அரசுக்கு சீனா வைத்த செக்மேற்
## ஆடி போன மத்திய வங்கி

## இலங்கைக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள்
## எச்சரிக்கும் உலக நாடுகள்

## சீனாவை இலங்கையில் இருந்து வெளியேற்ற விடுதலைப்புலிகளை
## கையாளப்போகும் அமெரிக்கா,இந்தியா

# இலங்கைக்கு சீனா வைத்த செக்மேற் – ஆடிப்போன மத்திய வங்கி

இன்றைய பூகோள அரசியல் நிலைமையின் படி, உலக நாடுகள் முழுவதும் கொவிட் வைரசினுடைய கோரப் பிடிக்குள் சிக்கிப் போயுள்ளன. இதனால் உலக நாடுகள் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைவதற்கு பெரும் காரணமாக கொவிட் தொற்று அமைந்திருக்கிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் தமது பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பெரும் சிரமத்தை சந்தித்துவரும். இலங்கையும் கொவிட் பரவலினால் பொருளாதார வீழ்ச்சியினைக் கண்டுள்ளது. கொவிட் வைரசின் திரிபான டெல்டா நாட்டில் பரவியிருப்பதாகவும், நாளொன்றில் பதிவாகும் சராசரி மரணங்களாக 200க்கு மேல் இருந்தபோதும். கடந்த சில நாட்களாக 200இற்கு உட்பட்டே மரணங்கள் பதிவாகின்றது. எனினும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2000-3000 என்ற ரீதியில் பதிவாகிறது. எனினும் எதிர்வரும் காலங்களில் கொரோனா வைரசின் தாக்கம் தற்போதைய நிலைமையை விட இலங்கையில் அதிகரிக்கும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக உலக நாடுகளில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைப் போலவே இலங்கையிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்பது உண்மைதான். ஆனாலும் சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு வைத்த செக்மேற்றின் காரணமாக பொருளாதாரத்திலிருந்து மீள் எழுச்சிபெற முடியாத நிலையில், அத்தியாவசியமற்ற / அவசர தேவையற்ற தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு 100 வீத உத்தரவாத பண வைப்பீட்டை அத்தியாவசியமாக்கி, உடன் அமுலாகும் வகையில் நடைமுறைப்படுத்த நாணய சபை தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கும் தன்னிறைவு பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவதற்கும் இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசுகள் உரிய திட்டமிடல்களையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டிருக்கவேண்டும். தடைசெய்யப்பட்ட பொருட்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அவற்றை உற்பத்தி செய்திருந்தால் இலங்கை இன்று பொருளாதாரத்தில் உலகில் அதி உச்சத்தைப் பெற்றிருக்கும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை அபிவிருத்தியடைந்த நாடுகள் பொருளாதார ரீதியில் மேலோங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். குறித்த அபிவிருத்தியடைந்த நாடுகளின் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒன்றினை மட்டுமே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு கடன் அடிப்படையில் வழங்க முன்வருவார்கள்.

தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகள் என்பது மொத்த தேசிய உற்பத்தியில் தான் தங்கியுள்ளது. இதில் பெரும் புள்ளியாக மத்திய வங்கி செயற்படுகின்றது. ஒரு பேனாவைக் கூட உற்பத்தி செய்யாத இலங்கை ஒரு மாதத்திற்கு 10 கோடிப் பேனாக்களை இறக்குமதி செய்யவேண்டிய தேவை இருக்கிறது. பேனாக்களின் பாவனை அதிகமாக இருப்பதும் ஒன்று. ஆகவே பேனாக்களை இறக்குமதி செய்வதற்காக ஒரு தனியார் நிறுவனம் முழுத் தொகையினையும் குறித்த நாடுகளுக்கு வழங்க முடியாது. ஆகவே மத்திய வங்கியின் ஊடாகவே பணப்பரிமாற்றம் இடம்பெறுகிறது. இதைப் போன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் மொத்த இறக்குமதிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்கின்றன. இதன் கிளை நிறுவனங்கள் மூலம் பொருட்களை அதன் நுகர்வோருக்கு வழங்குவதன் அடிப்படையிலேயே பணத்தின் சுழற்சி முறையும் நடைபெறுகின்றது.

கடந்த கால அரசுகள் இலங்கையில் நிலையான அபிவிருத்தியினை ஏற்படுத்தி உற்பத்தியை அதிகரித்திருந்தால் இன்று நாட்டின் தேசிய உற்பத்தி அதிகரித்திருக்கும். இந்த நாடு இன்று கொரோனா வைரசினை எதிர்கொண்டு பொருளாதார ரீதியிலும் தமது கட்டமைப்புக்களை வளர்த்துக்கொண்டிருக்கும். குறிப்பாக தடை விதிக்கப்பட்ட பொருட்களை வெளிநாடுகளில் இருந்து பார்சல் முறையில மக்கள் கொள்வனவு செய்யும் நிலை தற்போது காணப்படுகிறது. அதற்காக கனடா, பிரான்ஸ், இந்தியா போன்ற நாடுகள் முக நூல்களில், இணையத்தளங்களில் தற்போது விளம்பரங்களை வெளியிட்டுள்ளார்கள்.

இலங்கையில் கடந்த பல வருடங்களாக அங்கர் பால்மா முதலிடத்தில் இருந்தது. அதனைத் தடைசெய்ததன் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு இலாபம் கிடைத்துவிட்டதாக தெரிவிக்கின்றனர். இருந்தபோதிலும் இந்நாட்டு மக்கள் தொடர்ந்தும் அதனைப் பாவித்து வந்தமையினால் தற்போது பால்மாவினை வேறுவிதத்தில் இறக்குமதி செய்து தமது தேவைகளை பூர்த்தி செய்யும் நிலை ஏற்படுகிறது. தற்போது மஞ்சளை தடைசெய்ததால் தற்போது மஞ்சளின் விலை அதிகரித்திருக்கிறது. அதுவும் கலப்பு மஞ்சள் என்றே கூறப்படுகின்றது. பல நாடுகளில் உற்பத்தி செய்யும் பொருட்களை இலங்கை நாடு ஏன் கொள்வனவு செய்யவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆகவே குறித்த நாடுகளது வருமானங்களும் குன்றிய நிலைக்குத் தள்ளப்படுவதுடன் பல ஒப்பந்தங்களும் இரத்துச் செய்யப்படவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இன்று வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யாவிட்டால் மிக விரைவில் குறித்த வாகனங்களை கட்டையில் ஏற்றவேண்டிய நிலை உருவாகும். வன்னியில் யுத்தம் இடம்பெற்றபோது எரிபொருள் தடை விதிக்கப்பட்டபோது மண்ணெண்ணெயில் ஓடும் வாகனத்தை விடுதலைப்புலிகள் உருவாக்கினார்கள். அதனால் மண்ணெண்ணெயின் விலையும் அதிகரித்தது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் மக்கள் செழிப்பாக வாழ்ந்து வந்தனர். பொருட்களின் விலைகள் கட்டுப்பாட்டில் இருந்தபோதும் விடுதலைப்புலிகளால் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இலங்கை அரசாங்கம் ஒரு வாகனத்தை பாவிப்பதற்கு முன்னர் வன்னிக்கு குறித்த வாகனம் வந்துவிடும். யுத்த காலத்தில் அதிக செலவீனங்களை அரசாங்கம் செய்தது.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் துரதிஷ்டவசமாக இடம்பெற்றதல்ல. ஒரு நிர்வாகக் கட்டமைப்பை கொண்டிருந்த விடுதலைப்புலிகளை தடைசெய்து அவர்களை இல்லாதொழிக்க சர்வதேச நாடுகளுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இப்போரை முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் விளைவு சீனாவின் அடிவருடிகளாக தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் செயற்படுகின்றது. நிலைமை இவ்வாறிருக்கின்றபோது மத்திய வங்கியில் செயற்படும் ஆளுநர்கள் தாம் சுயாதீனமாக செயற்பட முடியாமல், அரசின் அழுத்தங்களுக்காகவே தாமாகவே பதவி விலகுகின்றனர்.

அத்தியாவசியப் பொருட்கள் என அரசாங்கம் எதனைக் கருதுகிறது. அத்தியாவசியமற்றப் பொருட்கள் எவை என அரசாங்கம் கருதுகிறது எனத் தெளிவுபடுத்தவேண்டும்.

நாட்டின் வருமானத்தை அடியோடு அழித்து வருகின்ற டயலொக், மொபிடல், எயாடெல் போன்ற தனியார் தொலைத்தொடர்பு சேவைகளை ஏன் அரசாங்கம் தடைசெய்யக்கூடாது. அதுமட்டுமல்லாமல் லீசிங் கம்பனிகள் பல எமது நாட்டில் செயற்படுகின்றன. இவையும் வெளிநாடுகளுக்கே வருமானத்தை ஈட்டிக்கொடுக்கிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களை விட நாட்டில் இன்று தனியார் துறையினரின் பெற்றோல் நிரப்பு நிலையங்களால் வருமானம் சூறையாடப்படுகின்றது. அரசை விட தனியார்க் கம்பனிகள் தேயிலை, இறப்பர், ஆடைத்தொழிற்சாலைகளை அதிகளவில் இயக்கி வருகின்றனர்.

மருத்துவத்துறைக்காக இறக்குமதி செய்யப்படும் உபகரணங்கள், மருந்து வகைகள் என்பன பிற நாடுகளில் இருந்தே தயாரிக்கப்படடு இறக்குமதி செய்யப்படுகின்றது. தன்னிறைவு பொருளாதாரத்தை இலங்கை அடையும் வரையிலும் இலங்கை அரசு சீனாவின் ஒரு கைக்கூலியாகவே செயற்படும். ஆகவே இந்த அரசாங்கம் சீனாவின் பிடியிலிருந்து முதலில் வெளியில் வரவேண்டும். ஏனைய நாடுகளிடம் இருந்து பெற்றுக்கொள்கின்ற கடன்களை மீறச்செலுத்த நாட்டின் தற்போதைய வருமானம் போதியதாக இல்லை.

கொரோனா வைரசின் தாக்கத்தை அடுத்து கடனிலிருந்து மீள முடியாத நிலையில் மீண்டும் மக்களை வறுமைக்கோட்டுக்குள் தள்ளுகின்றதொரு நிலைக்குத் தற்போதைய அரசு மாறியுள்ளது. இதனை ஒரு சாட்டாக வைத்து கடனுக்குமேல் கடனை சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கி வருகிறது. 65.1 பில்லியன் வரையில் இதுவரையில் சீன அரசாங்கம் வழங்கியுள்ளது. இதனைவிடவும் துறைமுக அபிவிருத்திகள், பாதை புனரமைப்பு போன்றவற்றிற்கும் அரசாங்கம் கடனைப் பெற்றுள்ளது. அதனைவிடவும் தற்போதைய நிலையில் 4000 கோடி நாணயம் அச்சிடப்பட்டுள்ளது. பணவீக்கம் அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது. இலங்கை மத்திய வங்கி 1000 கோடி ரூபா பெறுமதியான நாணயத் தாளை அச்சிட்டது. திறைசேரி உண்டியலுக்கான ஏலத்தை முகாமைத்துவம் செய்ய முடியாமல் போனமையினால் 39.97 பில்லியன் ரூபா பணத்தை ஏற்கனவே அச்சிட்டது.

மத்திய வங்கியினால் செப்டம்பர் 01ம் திகதி 68.05 பில்லியன் பெறுமதியான உண்டியல் ஏலத்திற்கு விற்கப்பட்டது. 12 மாத கால எல்லைக்குள் 5.97 வீத நிரண்ய விலையில் 43.24 பில்லியன் பெறுமதியான உண்டியல்களை விற்க முடியாமல் போனது. ஆகையால் இதனை ஈடுசெய்யும் பொருட்டு புதிய நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளது. அதேவேளை செப்டம்பர் 02 ஆம் திகதி 1221 பில்லியன் ரூபாவாக உண்டியலின் மொத்த இருப்பு இருந்த போதிலும் அதற்கு மறுநாள் 1261 ஆக அதிகரித்துள்ளதாக புள்ளி விபரவியல் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் ஒரு நாட்டில் பொருளாதார வீழ்ச்சியும், நாணயத்தின் வீழ்ச்சியும் ஏற்படுகின்ற சரிசமமான நேரம் இந்த நாடு சோமாலியாவை விட மிக மோசமான நிலைக்குக் தள்ளப்படும்.

தற்போது இறக்குமதிகளை இலங்கையரசு நிறுத்தியுள்ளது. இதில் மொத்த வியாபாரிகள் பாதிக்கப்படுவதுடன் இலங்கை நாடானது ஒரு தன்னிறைவு கொண்ட பொருளாதார நாடாக திகழ முடியாமல் அனைத்து விடயங்களிலும் பின்தங்கிய நிலை இந்நாட்டில் உருவாகும். எனவே தொடர்ந்தும் அரசு பிணங்களின் மேல் நின்று ஆட்சி செய்யும் நிலையே உருவாகும். இதனால் பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் நாட்டில் உருவாகும்.

**நெற்றிபொறியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

### கொவிட் பரவலும், பேசுபொருளாகியுள்ள இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியும்

இலங்கையில் மீண்டும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை அமுல்ப்படுத் தப்பட்டுள்ளது. எனினும் மக்களை தொடர்ச்சியாக வீட்டிற்குள் அடைத்துவைத் திருக்க முடியாத நிலையில். மக்களின் நடமாட்டம் வீதிகளில் அதிகரித்திருப்பதையும். உணவுப்பொருட்களை வாங்குவதற்காக நீண்ட வரிசையில் மக்களை வெளியில் காணமுடிகிறது. மக்களுக்கும் வேறு வழியில்லை. அரசினாலும் நிவாரணங்களை மக்களுக்கு வழங்க முடியாத கையறு நிலையில். மக்கள் வெளியில் வர வேண்டிய தேவை இருக்கிறது.

தற்போது நாட்டின் கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 200 இற்குள் பதிவாகின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கை 2000-3000இற்குள் இனங்காணப்படுகின்றனர். எனினும் வைத்தியர்கள் இலங்கையில் பரவியிருப்பது டெல்டா என உறுதியாகக் கூறுகின்றனர். எனினும் இலங்கை இன்னமும் அபாய வலயத்தில் தான் உள்ளது என தெளிவாகக் கூறப்படுகிறது. ஊரடங்கு சட்டம் முழுமையாக அமுல்ப்படுத்தப்படாவிட்டாலும் தற்போதிருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடித்தாலே இலங்கையினது கொவிட் பரவல் நிலையினை இவ்வருட இறுதிக்குள் முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர இயலும் என்பது சுகாதாரத் துறையினரின் நம்பிக்கையும் வேண்டுகோளும்.

இந்த கொவிட் பரவலுக்கு மத்தியில். இலங்கையினது பொருளாதார வீழ்ச்சி குறித்து அனைவராலும் இன்று பேசப்படுகின்றது. இலங்கையினது பொருளாதாரம் இன்று நேற்று வீழ்ந்ததல்ல கடந்தகால தொடர்ச்சியே இன்று இவ்வளவு பொருளாதார நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ளக் காரணமாக அமைந்திருக்கிறது. இன்று நாட்டின் மத்திய வங்கி நிலைகுலைந்துபோயிருக்கிறது. அதற்குள்ளும் அரசியல் பிரச்சினைகள் தலையெடுத்துள்ளது. தொடர்ச்சியாக பதவிக்கு வரும் மத்திய வங்கியின் ஆளுநர்கள் இராஜினாமா செய்து வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் லக்ஸ்மன் அவர்களும் இராஜினாமா செய்யவிருக்கிறார்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளின் முறையற்ற திட்டங்களும் இனவாதங்களும் தான் இந்த நாட்டை இன்று கடனாளியாக பிற நாடுகளிடம் கையேந்தி நிற்கும் நிலைமையை இன்று உருவாக்கியிருக்கிறது. இலங்கை நினைத்தாலும் சீனாவின் பிடியிலிருந்து நாட்டை மீட்க முடியாத அளவிற்கு நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளது. தற்போதைய ஆட்சியாளர் இன்னும் மூன்று வருடத்தில் நாட்டை ஆட்சிசெய்துவிட்டு சென்றுவிடுவார். ஆனால் தொடர்ந்து இனிவரும் காலங்களில் சீனா இந்நாட்டில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான அனைத்து வேலைகளையும் திறம்பட செய்துமுடித்துவிட்டது என்பதுதான் மிக முக்கிய விடயம்.

துறைமுக நகரம் என்கிற போர்ட் சிற்றி சாதாரண விடயமல்ல. நாட்டிற்குத் தேவையானதும். நாட்டிற்கு மிக ஆபத்தான துமாக மாறப்போகும் வேலைத்திட்டம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த வேலை த்திட்டம் சீனாவின் கைகளில் சிக்கியமை தான் எதிர்ப்புக்களுக்கு பிரதான காரணம். இலங்கையின் இனவாத அரசுகளின் செயற்பாட்டின் விளைவை இன்று சிங்கள மக்களே அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். இந்த உலகத்தின் மிகப் பெரிய நுகர்வோராக. முதலாளிகளாக கோலோச்சும் தமிழனே போதும் இந்நாட்டின் பொருளாதாரத் துறையினை வளர்தெடுக்க என்பதை இந்த இனவாத சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டாலும். இந்நாட்டின் பௌத்தம் ஒருபோதும் அனுமதிக்காது.

# 159 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



சோவியத் படைகள் ஆட்டிலறிச் சூடுகளால் இரவில் பதிலடி கொடுத்ததுடன் கெரில்லாக்களின் நிலைகளின் மேல் விமானத் தாக்குதல்களையும் மேற்கொண்டார்கள். தவிர ஸ்பெற்னாசின் (சிறப்புப் படைப்பிரிவு) திடீர்த்தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

ஈ) நகரின் மேல் தாக்குதல்

இடையிடையே கெரில்லாக்கள் பெரிய படைகளை ஒன்றுதிரட்டி (20000 - 25000 பேர் வரை) காபூலைச் சுற்றியுள்ள இடங்களிலும் இன்னும் சில முக்கியமான நகரங்களிலும் (கெராட், கந்தகார், ஜலாலாபாத், கோஸ்த் போன்ற நகரங்களில்) பலமான சூட்டுத் தாக்குதல்களைத் தொடுத்தார்கள். சோவியத் படைகள், அரச படைகள் இருக்கின்ற இடங்களின் மேல் அவர்கள் மோட்டார்களாலும் பின்னுதைப்பற்ற எறிகணை செலுத்திகளாலும் தன்னியக்க எறிகணை செலுத்திகளாலும் பல்குழல் எறிகணை செலுத்திகளாலும் தன்னியக்க எறிகணை செலுத்திகளாலும் பல்குழல் எறிகணை செலுத்திகளாலும் கனரக இயந்திரச் சுடுகலன்களாலும் சூடுகளை மேற்கொண்டார்கள். இத் தாக்குதல்களின் காப்புடன் கெரில்லாக்களின் மிகச் சிறிய குழுக்கள் நகர்ப் பகுதிகள் நுழைந்து தமது பாதையில் எதிர்ப்படும் எதிரிப் படைகளையும் வாகனங்களையும் அழித்து அவர்களது வலுவான நிலைகளையும் தொலைத்தொடர்புகளையும் சிதைத்தது. முற்றுகையைப் போல காபூல் அரசிற்கெதிரான இவ்வகைச் சமர் நடவடிக்கைகள் மாத்திரமே ஒப்பீட்டளவில் வெற்றியாக இருந்தன.

கெரில்லாக்களின் பலவீனமான பக்கங்களாகப் பின்வருவன இருந்தன. கட்டளையாளர்களின் மட்டமான நிபுணத்துவம் நவீன ஆயுதங்களை வினைத்திறன் மிக்கவகையில் பயன்படுத்தும் அறிவின்மை காயமடைந்தவர்களுக்கான தரமற்ற மருத்துவ உதவி போன்றனவாகும். கூடுதலான படைப்பிரிவுகளில் தந்திரோபாயத் தயார்ப்படுத்தலுக்குள்ளான கீழ் நிலை அதிகாரிகள் பற்றாக்குறையாக இருந்தது. இதனால் கூடியளவு தவறுகள் விடப்பட்டன. எடுத்துக்காட்டாக பாரியளவிலான இழப்புக்கு இட்டுச்செல்கின்ற பகுத்தறிவற்ற "நெற்றியடித்" தாக்குதல்கள். நடைபாதையொன்றால் கெரில்லாப் படைப்பிரிவு உணவுப் பொருட்களையும் வெடி பொருட்களையும் எடுத்துச்செல்கின்ற போது சோவியத் எதிர்ப்புப்படை தென்பட்டால் வெறுமனே பாதையை மாற்றிச்செல்வதற்குப் பதிலாகக் கெரில்லாக்கள் அவர்களுடன் சமரிடத் தீர்மானிக்கின்றனர்.

கெரில்லாக்களில் பெரும்பான்மையில் இருந்த அறிவற்றவர்கள் பின்வரும் விடயங்களில் அதாவது எறிகணை எறியப்படும் திசை அல்லது வெடிப்பின் இயக்கப்போக்கு போன்றவற்றில் தெளிவற்ற அறிவைக் கொண்டிருந்தார்கள். ஆகவே தான் மோட்டார்களையும் எதிர்ச்செயலாற்றல் எறிகணைகளையும் அவர்கள் சரியாகப் பயன்படுத்தியது மிகக்குறைவாகும். தாக்குதலின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் இவற்றிற்குச் செலவான எறிகணைகளின் ஒப்பீட்டு வீதம் மிக அதிகமாகும். சுயமாகக் கண்ணிகளையும் கையெறிகுண்டுகளையும் தயாரிக்கத் தெரியாதவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். அத்துடன் கண்ணத் தடுப்புக்களையும் சிதறல் கண்ணிகளையும் பொருத்தமாக வைக்கத் தெரியாதவர்களாகவும் இருந்தார்கள். கடின காயங்களுக்குப் பின்னர் மிகக் குறைந்தளவு எண்ணிக்கையிலான கெரில்லாக்களே குணமடைந்தார்கள். ஆனால் நடுத்தரக் காயங்களால் பெரும்பாலானோர் ஊன முற்றவர்களாக மாறினர். இதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவதாக படைப்பிரிவுகளில் மருத்துவர்கள் மருந்துப் பொருட்கள் உபகரணங்கள் போன்றவற்றின் பற்றாக்குறை இரண்டாவதாக கடுமையான காயங்களையும் தீக் காயங்களையும் திடமாகச் சகித்துக் கொள்ளும் பழக்கம் ஆப்கானிஸ்தானியர்களிடம் உள்ளது. இதன்விளைவாக அவர்கள் ஒன்றில் மருத்துவரிடம் செல்ல மாட்டார்கள் அல்லது மிகத் தாமதமாகச் செல்வார்கள். மூன்றாவதாக காயமடைந்தவர்களைச் சரியாகப் பராமரிக்காமை சுகாதாரமின்மை காயமடைந்தவனுக்கான விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமை போன்றனவாகும்.

கெரில்லாக்களுக்கெதிரான சோவியத் படைகளின் நடவடிக்கைத் தந்திரோபாயம் ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் பின்வரும் நடவடிக்கைத் தந்திரோபாயப் பணிகளை நிறைவேற்றின.

அ) தமது முகாம்களிலும் ஆதார நிலைகளிலும் தற்காப்பை மேற்கொண்டார்கள். இந்த நோக்கத்திற்காக முகாம்களைச் சுற்றி (இராணுவ நகரங்களைச் சுற்றி) கண்ணிவயல் வட்டத்தை உருவாக்கியதுடன், முட்கம்பி வேலிகளையும் சமிக்கை அமைப்புக்களையும் ஏற்படுத்தினார்கள். சகல பாதைகளும் ஆட்டிலறி, பல் குழல் எறிகணை செலுத்தி, இயந்திரச் சுடுகலன்கள், மோட்டார்கள் போன்றவற்றின் தாக்குதலுக்கு இலக்காக்கப்பட்டன. தற்காப்பு நிலைகளுக்குள்ளே ஆளணிகள், கனரக வாகனங்கள், களஞ்சியங்கள் போன்றவற்றை எதிர்ச்செயற்பாட்டு மோட்டார்த் தாக்குதலிலிருந்து காப்பதற்கான பதுங்கிடங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இந் நடவடிக்கைகள் கெரில்லாக்களிடமிருந்து நம்பகரமான பாதுகாப்பைக் கொண்டிருந்தன. ஆனால், இவை படைகளின் நடமாட்டத்தைக் கணிசமான அளவு குறைத்தன. தமது கண்ணிகளுக்கு இடையே ஒடுக்கமாக, வளைந்து நெளிந்து செல்கின்ற பாதைகளால் அவர்கள் முன்னேறிச் செல்ல வேண்டியிருந்ததுடன், இடையிடையே முஜாகுதீன்களின் சூட்டுக்கும் இலக்காக வேண்டியிருந்தது.

ஆ) தமது போக்குவரத்துப் பாதைகளைக் காத்தார்கள். இதற்காக, பிரதான போக்குவரத்துப் பாதை, வீதி (அத்துடன், குழாய்ப்பாதை) போன்றன நெடுகிலும் (தெர்மேஸ் - சமான்கான் - சலாங் சுரங்கப்பாதை - சரிகார் - காபூல் வரையான பாதை நெடுகிலும்) ஒவ்வொரு 3 - 5 கி.மீ தூரங்களுக்கிடையில் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவை வெவ்வேறான ஆயுதங்களைக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக, சமதரைப் பிரதேச வீதியில், இவ்வாறானவை ஒவ்வொன்றும் பிரதான படையாக தரையில் அகழ்ந்து நிலையெடுத்துள்ள மூன்று ராங்கிகளைக் கொண்டிருந்தன. மலைப்பாங்கான பிரதேசங்களில் ராங்கிகளுக்குப் பதிலாகக் காலாட்படைக் கவசவாகனங்கள் இருக்கலாம் அல்லது கவசவாகனங்கள் அறவே இருக்காது. ஆளணிகள் (வழக்கமாக ஒரு சூட்டாயுதப் பிளாட்டூன்) கல்லாலான (மலைப்பகுதிகளில்) அல்லது மண்ணாலான தற்காப்புக் கட்டுமானங்களுக்குள் மறைந்திருந்தன. காவல் நிலையத்திற்கு வருகின்ற பாதைகளில் துரப்பெதிர்ப்புக் கண்ணிகள் விதைக்கப்பட்டிருந்தன. காவல் நிலையத்தைக் கெரில்லாக்கள் தாக்குகின்றபோது, அதனது கட்டளையாளன் உடனடியாக வானொலி மூலம் வான், ஆட்டிலறி (சுற்றிவர முற்கூட்டியே தாக்கப்படுகின்றது) அல்லது ஆட்படை உதவியைக் கோருவான்.

இவ்வாறாகவே, குஸ்கா - கெராட் - நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள சிந்தாந் விமானத்தளம் வரையான வீதியும் (குழாய்ப்பாதை) பாதுகாக்கப்பட்டது. கெரில்லாக்களின் செயற்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் ,ரண்டு பாதைகள் நெடுகிலுமுள்ள சகல கிராமங்கள், தனியாக இருக்கின்ற கட்டடங்கள் போன்றன யாவும் படிப்படியாக அழிக்கப்பட்டன.

நகர்வின்போது போக்குவரத்து வாகனத் தொடரணிகளுக்குக் காப்பளித்தல். மேலே ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, இரண்டு ராங்கிகள் அல்லது காலாட்படை யுத்த வாகனங்கள், இரண்டு கவச வாகனங்கள், ஒரு பிளாட்டூன் கனரகவாகனப்படை போன்றவற்றை உள்ளடக்கியதாக (மாதிரியான) பாதுகாப்பு இருந்தது. நடைமுறைஅனுபவத்தின் பிரகாரம், இவ்வாறான பாதுகாப்பு பற்றாக்குறையானதாகும். இந் நிலையில் வாகனத்தொடரணிக்கு வழிகாட்டியாக ஸ்பெற்நாஸ் படைப்பிரிவு அல்லது வான்குடைவீரர்கள் செயற்படத் தொடங்கினார்கள். நகர்கின்ற வாகனத் தொடரணிக்கு முன்னே வீதியின் இருமருங்கிலும் உலங்குவானூர்தியிலிருந்து அவர்கன் தரையிரங்கி, அங்கே கெரில்லாக்கள் பதுங்கித் தாக்குதலுக்குப் பொறி வைத்திருந்தால், அவர்கள் அதற்குள் அகப்பட்டுச் சமரிட்டார்கள்.

**தொடர்வான்...**
**நெற்றிபொறியன்**

# சீனாவின் காய்நகர்தல்களிலிருந்து இலங்கை தப்பித்துக்கொள்ளுமா?

இலங்கை Economic Emergency என்று கூறும்பொழுது என்னுடைய தொப்புள்கொடி உறவுகள் வாழுகின்ற நாடு இலங்கை. அந்த இலங்கையில் இப்படியொரு நிலைமையா என்பது தான் எங்களுக்கு மிக வருத்தமாக இருக்கின்றது. இந்த வருத்தத்திற்கு காரணம் என்னவென்றால் அங்கு நடக்கின்ற அரசாங்கம் தான். ஒரு அரசாங்கம் எப்படி இருக்கும். அதாவது ஜனநாயக ஆட்சி அல்லது ஜனநாயகம் என்பது தான் இலங்கையில் அனைவராலும் போற்றப்படுகின்றது. அப்படிப்பட்ட ஜனநாயக ஆட்சியில் 8 நபர்கள் மிக முக்கியமான நபர்கள் இலங்கை வரலாறிலே அப்படியொரு வரலாறு நடந்ததே இல்லை. நிதி அமைச்சகமாக இருக்கட்டும் அல்லது எக்கனோமிக்ஸ் பொலிஸியாகட்டும் டிபன்சா இருக்கட்டும் இது மூன்றுமே ஒரு குடும்பத்திற்கு கீழ் இருக்கின்றது. **ராஜபக்ச கோட்டபாய ராஜபக்ச பசில் ராஜபக்ச இவ்வாறு இவர்களுடைய குடும்பத்திற்கு கீழேயே இப்பொழுது இலங்கை முழுவதுமாக அடிமைப் பட்டுகிடக்கின்றது என்று சொல்லலாம்.** இந்த மூன்று நபர்கள் தானா என்று பார்த்தால் இல்லையாம் அவங்களுடைய குடும்பம் என்று பார்த்தால் கிட்டத்தட்ட 8 நபர்கள் இருக்கின்றார்கள். இந்த உலகத்திலேயே மன்னர் ஆட்சியில் கூட 8 நபர்கள் சேர்ந்து ஒரு அரசாங்கத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பில்லை என்று சொல்கின்றார்கள்.

ஆகவே இலங்கையில் நடப்பது என்னவென்று பார்த்தால் இலங்கையில் CCP வகையான ஒரு ஆட்சி நடைபெறுகின்றது என்று சொல்கின்றார்கள். CCP என்றால் Chinese Communist Party என்பது தான். ஆகவே Chinese Communist Party வழியாகத் தான் எங்களுடைய அரசியலும் நடந்து வருகின்றது என்று கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஒரு வருடத்திற்கு முன்னரே கூறினார். 2019 இல் இருந்தே இலங்கைக்கு நல்ல நேரம் இல்லை. நன்றாக கவனித்தால் தெரியும் இலங்கையின் எக்கனோமிக் டவுனானதே 2019 இல் தான். அதே மாதிரி சில தேவாலயங்களில் குண்டு வெடித்ததும் அந்த குண்டு வெடிப்பின் பின்னர் அங்கு சுற்றுலா முழுவதுமாக முடங்கியதும் அந்த எக்கனோமிக்கை மறுபடியும் டவுன் பன்னியது. அடுத்ததாக 6 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னதும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கே விட்டுக்கொடுத்திட்டார்கள். இதே போன்று கடன் தொகை கூடி கூடி வருகின்ற பொழுது இந்த இலங்கை சீனாவிற்கு அடிமையாக இருந்துவருகின்றது என்பதற்கு இரண்டு பறைசாற்றும் நிகழ்வுகள் நடைபெற்றது.

ஒன்று சீனாவினுடைய கம்னீசிய பார்ட்டியினுடைய 100வது ஆண்டு தினம். அந்த 100வது ஆண்டு தினத்திற்கு இலங்கையின் சார்பாக ஒரு கோல்ட் கொயின் என்பது வெளியிடப்பட்டது. இதுவரையிலும் இலங்கையினுடைய வரலா றுகளில் ஒரு நாட்டிற்காக நாட்டினுடைய தியாகி களுக்காக இல்லை ஒரு நாடு நமக்கு நல்லது செய்கின்றது என்பதற்காக வேறு ஒரு நாட்டிற்காக இவ்வாறான கோல்ட் கொயின் என்பது எல்லாம் இறக்கிவிடுவார்கள். ஆனால் ஒரு அரசியல் கட்சிக்காக Chinese Communist Party என்ற அரசியல் கட்சிக்காக இலங்கை நாட்டின் சார்பாக ஒரு நாணயம் என்பது வெளியிடப்படுகின்றது. இது மிகப்பெரிய வருத்தத்தை பல நபர்களுக்கும் தந்தது என்று சொல்லலாம். ஏனென்றால் நாம் அந்தளவுக்கு அடிமைப்பட்டிருக்கின்றோம் என்பது தான்.

தற்பொழுது இலங்கை ஒரு கைக்கம்னிசை அமைத்தார்கள். 2020 ஆம் ஆண்டிலே அந்த கைக்கம்னீசிய தலைவர் இவர் தான் என்று சொல்லி மிலிந்த மொறகொட என்பவருக்கு பெயர் அடிபட்டது. ஆனால் அந்த மிலிந்த மொறகொட என்பவர் வராமலே இருந்தார். 2021 இல் அவர் பொறுப்பேற்றுவிட்டார். 2021 இல் ஒரு ரிப்போர்ட் வெளியாகியிருக்கின்றது. மிலிந்த அவர்கள் அந்த ரிப்போர்ட்டை வெளியிட்டிருக்கிறார்கள். நீங்கள் சீனாவின் பக்கம் சாய்ந்து கொண்டிருக்கிறீர்கள் அவ்வாறு சாயக்கூடாது நீங்கள் என்ன செய்ய வேண்டும் இந்தியாவின் பக்கம் வரவேண்டும். மிலிந்த மொறகொட என்ன சொன்னாரென்றால் நீங்கள் அடிக்கடி என்ன செய்ய வேண்டும் இந்தியாவுடன் நிறைய போர் ஒத்திகையில் ஈடுபடவேண்டும் இந்தியா கொடுக்கவேண்டிய கொஞ்ச தொகை இருக்கின்றது லைனாப் கிரிடிட் என்று சொல்வார்கள் அந்த லைனாப் கிரிடிட் என்பதை யூட்டலைட்ஸ் பன்னனும் இந்தியாவிற்கு சார்பாக இருக்கின்ற பல நபர்களுடன் அவர்களுடைய பொருளாதாரதை மேம்படுத்தும் விதமாக வியாபாரத்தை பெருக்க வேண்டும். இவ்வாறு இலங்கையினுடைய கைக்கம்னிஸ் ரிப்போர்ட்டை வெளியிட்டிருக்கின்றார்கள். இந்த ரிப்போர்ட்டை வெளியிட்டதன் காரணமே கோட்டபாய ராஜபக்ச என்று சொல்லலாம். **கோட்டபாய ராஜபக்ச என்ன சொல்லி வந்தார் என்றால் நான் எந்த அணி சேரவும் மாட்டேன். சீனாவின் பக்கமும் போக மாட்டேன் இந்தியாவின் பக்கமும் போக மாட்டேன். எங்களது நாட்டிற்கு யார் நல்லது செய்கின்றார்களோ அவர்களுடைய பக்கம் அல்லது அனைத்து நாடுகளினதும் நட்பும் நமக்கு கிடைக்கும் என்று சொல்லியிருந்தார்.**

ஆனால் தற்பொழுது முழுமையாகவே இது சீனாவின் பக்கம் போவதால் அங்கு இருக்கும் மக்களுக்கும் அங்கிருக்கும் எர்வாமன்டுக்கும் பொருளாதாரத்திற்கும் பல சிக்கல்கள் வந்திருக்கின்றது. அதனால் தான் இந்த எக்கனொமிக் எமர்ஜன்சி என்பது கொண்டுவரப்பட்டது அல்லது எக்கனமிக் எமர்ஜன்சி என்ற கட்டாய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கின்றது என்று சொல்லலாம். இலங்கை எக்கனமிக் எமர்ஜன்சி என்று சொல்லும் பொழுது அவர்களுடைய கடன் என்பது அவர்களுடைய ஜிவிபிடி ரேஸ் எடுத்துப் பார்த்தால் 101 சதவீதமாக இருக்கிறது. ஆகவே கடன் என்பது மொத்த வருமானத்தில் 101 சதவீதம் அதிகரித்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவை கணக்கெடுத்து பார்த்தால் 138 கோடி மனிதர்கள் இருக்கினற் இந்தியாவை பார்த்தால் அது 26 சதவீதமாக இருக்கிறது. ஆகவே இவ்வளவு பெரிய மக்கள் தொகை கொண்ட நாடு என்று சொல்லும் போது இந்த நாட்டில் நிலம் என்பதும் இருக்கிறது. அதாவது நிலம் சார்ந்த தொழில்கள் தொழிற்சாலைகள் இது எல்லாமே இருக்கின்ற இந்திய நாட்டிலேயே பப்ளிக் டெப்ட் வெஸ்சஸ் ஜிவிபிடி அந்த ரேஸ் எடுத்துப்பார்த்தால் 21 இல் இருந்து 26 சதவீதமாக இருக்கும் போதே இலங்கையில் அது 101 சதவீதமாக இருப்பது மிகப்பெரும் அச்சுறுத்தலாக நாம் பார்க்க வேண்டும்.

சரி எங்கிருந்து இலங்கை அரசாங்கம் கடன் வாங்கியிருக்கின்றது. சீனாவிடம் இருந்து கிடையாது என்று சொல்பவர்களுக்கு இலங்கை அரசாங்கமே வெளியிட்ட சில பல கிராப் இருக்கு. 10 சதவீதம் அவர்களுடைய கடன் சீனாவினுடைய அந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறது. 10 சதவீதம் ஜப்பானிடமிருந்து வாங்கியிருக்கிறார்கள் 47 சதவீதம் இன்டநெசனல் கெபிடல் மார்க்கட்டிலிருந்து வாங்கியிருக்கிறார்கள் மல்டிலாடரல் டெவலப்மன்ட் வங்கியிடம் இடமிருந்து ஒரு 22 சதவீதம் வாங்கியிருக்கிறார்கள். இந்தியாவிடமிருந்து 4.5 சதவீதம் வாங்கியிருக்க வாய்ப்பு இருக்கிறது. நான் சொன்ன வார்த்தையில் சீனாவிடமிருந்து 10 சதவீதம் தான் வாங்கியிருக்கிறது என்று கூறினேன் பார்த்தீர்களா ஆனால் இன்னொரு வார்த்தையை கூறினேன் இன்டர்நெசனல் கெபிடல் மார்க்கட் என்று கூறினேன் பாருங்கள் பல நிறுவனங்களிடமிருந்து 47 சதவீதம் கடன் வாங்கியிருக்கிறது என்று கூறினேன் இந்த நிறுவனங்களில் பாதிக்கு மேற்பட்ட நிறுவனங்கள் சீனாவை சேர்ந்த நிறுவனங்கள்.

ஆகவே சீனா நேரடியாக அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் வங்கிகளினுடைய கடனை கொடுக்காமல் அவர்களுடைய நிறுவனங்கள் வழியாக இலங்கைக்கு கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நேரடியாக நாம் யாரையும் சுட்டிக்காட்ட முடியாது. சீனாவை காரணம் காட்ட முடியாது. ஆனால் இலங்கை பெரியளவில் ஏமாந்துகொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமே தெரிகிறது. தற்பொழுது இலங்கை ஶ்ரீலங்கா வாக்டோர் என்று சொல்லி மேற்குலக நாடுகள் அழைக்கிறார்கள். ஶ்ரீலங்கா வாக்டோர் சீனாவினுடைய பின்வாசல் ஶ்ரீலங்கா என்று சொல்கின்றார்களா என்றால் இல்லை. ஆசிய நாடுகளுக்குள் சீனாவால் நுழையக்கூடிய ஒரு இடம் ஒரு வாசல் எது என்று கேட்டால் இலங்கை தான். இதே மாதிரி பால்கன் நாடுகள் என்று பார்த்தால் பால்கன் ஸ்ரெட்ஸ் என்று கூறுவார்கள். பால்கன் ஸ்ரெய்ட்ஸ் வழியாகத் தான் பால்கன் பாக்டோர் என்று சொல்வார்கள். இந்த பால்கன் ஸ்ரெய்ட்ஸ் வழியாகத்தான் சீனா ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்தது. அதே மாதிரியான நுழைவாயிலாகத் தான் இலங்கையை பார்க்கின்றதே தவிர இலங்கைக்கு சீனாவால் நன்மைகள் நடக்கின்றதா என்று கேட்டால் இலங்கைக்கு சீனாவால் பெரிய ஆபத்துகள் மட்டுமே வந்துகொண்டிருக்கிறது.


DITS: PTI/ TWITTER-@CHINAEMBSL/ AP

அடுத்ததாக Vaccine உருவாக்கக்கூடிய தொழிற்சாலையை இலங்கைக்கு கொண்டுவரப்போகின்றார்களாம். Vaccine என்று சொல்லும் போதே அதற்கு தேவையான தொழினுட்பங்கள் அதிலிருந்து வரக்கூடிய கழிவுகள் இதை தாங்குவதற்கு ஒரு இடம் இருக்கின்றதா என்று கேட்டால் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு இடையே ஒரு 400 ஏக்கர் நிலப்பரப்பு இதற்காக தனிப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்டிருப்பதாக சொல்லுகின்றார்கள். ஆகவே சீனாவினுடைய தொழிற்சாலை கழிவுகளை போடக் கூடிய இடமாக இலங்கை அந்த தீவு மாற்றப்படப் போகிறது. இலங்கை என்று சொன்னாலே அதுவொரு தீவு நாடு இங்கு பெரியளவிலான நிலப்பரப்பு எல்லாம் கிடையாது. இந்த தீவு நாடடிற்குள் இந்த மாதிரியான தொழிற்சாலைகள் அதுவும் மருத்துவ கழிவுகள் நிறையக் கூடிய தொழிற்சாலையை கொண்டுவரும் பொழுது அதன் பின்னால் இருக்கின்ற பிரச்சனைகளை பற்றி இலங்கை கொஞ்சமாவது சிந்தித்திருக்கிறதா என்று கேட்டால் தெரியவில்லை.

ஆனால் அந்த தொழிற்சாலையை தொடங்குவதற்காக இவர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால் சிறிதளவாக பணம் வேண்டுகிறார்கள் கிட்டத்தட்ட 350 மில்லியன் அமெரிக்க டொலர் சீனாவிடமிருந்து இலங்கைக்கு கடந்த 2 வாரத்திலேயே கைமாறியிருக்கிறது. எதற்காக என்று கேட்டால் இல்லை நாங்கள் ஒரு அக்ரிமன்ட் போட்டிருந்தோம் ஏப்ரல் 2020 இல் இருந்து மார்ச் அளவில் ஒரு பில்லியன் அளவுக்கான அமெரிக்கன் டொலரை உதவி க்காக நாங்கள் இலங்கைக்கு கொடுப்போம் என்று சொன்னார்கள். உதவி என்று சொன்னால் இலவசமாக கொடுக்க வேண்டும். ஆனால் இவர்கள் செய்யும் உதவிகள் அனைத்துமே கடன் மீது கடன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த கடனின் வட்டியை கட்டுவதற்காக மறுபடியும் அங்கிருந்தே கடன் வாங்கப்படுகின்றது. ஒரு 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் இந்தியாவிற்கு கொடுக்க வேண்டியதாக இருந்தது. அந்த கடனை சீனாவிடமிருந்து வாங்கி இலங்கை அரசாங்கம் இந்தியாவிற்கு கொடுத்தது. என்ன காரணம் என்று கேட்டால் எங்களது தேவைக்கு அதிகமாக பணம் வந்துவிட்டது அதனால் நாங்கள் இந்தியாவின் கடனை தீர்க்கின்றோம் என்று சொன்னார்கள். அதே இலங்கை ஐந்து மாதமளவில் எங்கள் நாட்டுக்குள் எக்கனமிக் எமர்ஜன்சியை அறிவிக்கின்றோம் என்று சொன்னார்கள். எங்களிடம் டொலர் கையிருப்பு கிடையாது. எங்களுக்கு போதுமான பணம் தற்போதைக்கு வராமல் இருக்கின்றது எங்களது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி -3.6 ஆக இருக்கின்றது நன்றாக கவனித்துக்கொள்ளுங்கள் இலங்கையினுடைய பொருளாதார வளர்ச்சி - இல் சென்றுகொண்டிருக்கின்றது. - இல் சென்றுகொண்டிருக்கும் இந்த பொருளாதார வளர்ச்சி இன்னும் ஒரு வருடம் இப்படியே நீண்டுகொண்டிருக்குமானால் இலங்கை மொத்தமாக திவாழாகிவிடும். அவர்கள் வருமானத்தை விட கடனை கட்டுவதற்காக கூடுதலான தொகையை உருவாக்க வேண்டியதாக இருக்கும். அசல் தொகை கிடையாது வட்டி மட்டும் அப்படியில்லையா ஒட்டுமொத்த இலங்கையையும் அவர்கள் குத்தகைக்கு கொடுக்க வேண்டியதாக இருக்கும். 6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை கொடுக்க முடியாமல் அம்பாந்தோட்டை துறைமுகம் அதை சுற்றி இருக்கின்ற 1000 கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை சீனாவிற்கு நாம் கொடுத்தோமோ அதே போன்று பல இடங்களை இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு கொடுக்க வேண்டியதாக இருக்கும். இது எல்லாமே வரக்கூடிய நாட்களில் இலங்கை அரசாங்கம் கொஞ்சமாக யோசிக்க வேண்டிய தருணங்கள் என்று சொல்லலாம்.

இந்த யோசனையை சரியாக இந்த அரசாங்கம் செய்கின்றதா என்று கேட்டால் இங்கு தான் நாங்கள் உங்களுக்கு உதவுகின்றோம் எங்களது ஸ்டைல் ஆட்சியை நீங்கள் நடத்துங்கள் என்று சீனா இலங்கைக்கு ஒரு அழைப்பை கொடுத்தது. அவங்க ஸ்டைல் என்றால் கம்னீசியத்தில் லெனினிஸ்ட் என்னும் கொள்கை இருக்கின்றது. அந்த கொள்கை வழியாக இலங்கையில் நீங்கள் உங்களுடைய ஆட்சியை நடத்துங்கள். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் உங்களது குடும்பத்திடமே இந்த கட்டுப்பாட்டை வைத்துக்கொள்ள வேண்டும். அதனால் 8 நபர்கள் உங்கள் குடும்பத்தின் சார்பாக இலங்கையை ஆழுட்டும் என்று திட்டத்துடன் அங்கிருந்து வந்திருக்கலாம். சீனாவை பொறுத்தவரை ஒரேயொரு பார்ட்டி தான் வேறு எந்த பார்ட்டியும் கிடையாது. தற்பொழுது இந்தியாவில் ஒரு எதிர்க்கட்டி ஒரு ஆளும் கட்சி என்று இருக்கும் பொழுது சீனாவில் ஒரு கட்சி தான். அந்த ஒரு கட்சியில் இருக்கின்ற 14 நபர்கள் எடுக்கக்கூடிய முடிவுகள் தான் இங்கு முக்கியமான முடிவுகளாக பார்க்கப் படுகின்றது. அதே மாதிரி இலங்கையில் ராஜபக்ச குடும்பம் ஒரு 8 பேர் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் எடுப்பது மட்டும் தான் இங்கு முடிவாக இருக்கின்றது. அவர்கள் நல்லபடியாக தான் இருக்கின்றார்கள். கடன் வாங்குகின்றார்கள் செல்வசெழிப்பாக இருக்கின்றார்கள் எல்லாமே அவர்களின் கோம் டவுனில் தான் நடந்துகொண்டிருக்கின்றது. அம்பாந்தோட்டை என்று சொல்லும் பொழுது ராஜபக்ச அவர்களுடைய கோம் டவுன்.

விக்கி

12ஆம் பக்கம் பார்க்க...

# சீனாவை இலங்கையில் இருந்து வெளியேற்ற விடுதலைப்புலிகளை கையாளப்போகும் அமெரிக்கா,இந்தியா



பூகோள அரசியலினுடைய தாக்கம் மிகவும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. இலங்கையை பொறுத்தவரையில் இலங்கையின் பல இடங்களிலும் இந்த சீன அரசாங்கம் குறிவைத்திருக்கின்றது. ஆகவே குறி வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் அனைத்தும் ஏதோவொரு வகையில் பெற்றுக்கொள்வதற்கான முழுநடவடிக்கைகளையும் அவர்கள் நகர்த்திக்கொண்டிருக்கின்றார்கள். தற்பொழுது 42 வருடங்களின் பின்னர் போர்ச்சிற்றி சம்மந்தமான விடயங்கள் அதுவரைக்கும் அதனை தனது கையகப்படுத்தி தனது புலனாய்வு கட்டமைப்புக்களை சீன அரசாங்கம் தற்பொழுது ஆரம்பித்திருக்கின்றது.

இந்தியாவிற்கு பாரியதொரு சவாலாக அல்லது இந்தியாவை மலுங்கடிக்கின்ற ஒரு விடயமாகவே தற்பொழுது அரசியல் இராஜ தந்திரப்போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றுது. இதிலே கொரோனா வைரஸின் தாக்கம் ஒருபுறமிருந்தாலும் சீனா தனது வேலைகளை கச்சிதமாக காய் நகர்த்திக் கொண்டு செல்கின்றுது. இதிலே எந்தெந்த பகுதிகள் சுவீகரிக்கப்படுகின்றது சீன அரசாங்கத்தினால் சூறையாடப்படுகின்றுது என்ற விபரங்கள் கூட இன்றைய காலகட்டத்திலே அறியமுடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் நடமாடமுடியாத சூழல் ஊடகவியலாளர்கள் குறித்த பகுதிகளுக்கு செல்லமுடியாத ஒரு சூழல் இவ்வாறெல்லாம் இருக்கின்றது. இதனை நாம் பார்க்கின்ற பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டத்தை மலுங்கடிப்பதற்கு பல நாடுகள் அதிலே மும்முரமாக கிட்டத்தட்ட 45 நாடுகள் தீவிரம் காட்டியிருந்தன. அதிலும் குறிப்பாக அன்று வடக்கு கிழக்கு பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சீன அரசானது திருகோணமலை துறைமுகத்தை தங்களுடைய அபிவிருத்திக்கு தரும்படியும் திருகோணமலை துறைமுகத்தை தமது கைவசம் வைத்திருந்தால் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வலுவான நாடாக தாம் திகழ முடியும் என்று பிரபாகரன் அவர்களிடம் நேரடியாக அவர்கள் பேசியபொழுது அதனை பிரபாகரன் அவர்கள் மறுத்துவிட்டார்.

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திலே நீங்கள் எந்தவித நடவடிக்கைகளையும் மேற் கொள்ளமுடியாது என்ற பதில் தான் அவர்களுக்கு கிடைத்தது அப்பொழுது இந்த இராஜதந்திர நகர்வை தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் இருக்கும்வரை இலங்கை அரசாங்கம் கேட்டபொழுது இலங்கை அரசாங்கம் அதற்கு அந்த காலகட்ட த்திலே ஆமோதித்தது இலங்கை அரசாங்கத்திடம் சீன அரசாங்கம் கேட்ட பொழுது சீனா தற்பொழுது அதனை வலுப்படுத்திக்கொண்டு செல்கின்றது.

சீன அரசாங்கத்தை பொறுத்தவரையிலே எவ்வாறாயினும் இந்த நாட்டுக்குள் தான் காலடி எடுத்துவைக்க வேண்டும் நீங்கள் பாருங்கள் இந்த ஈழப்போர் முடிவடைந்ததன் பின்னர் சீன நாட்டினுடைய ஆக்கிரமிப்பு எப்படியெல்லாம் இந்த நாட்டுக்குள்ளே பொருளாதாரம் என்ற ரீதியிலே நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது மிகவும் ஒரு ஆபத்தான சூழ்நிலையை மீண்டும் தோற்றுவித்திருக்கின்றது.

ஆகவே தற்பொழுது இந்தியாவிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டம் மீண்டும் இலங்கையில் அவசியம் என்றவொரு நிலைப்பாடு தோற்று விக்கப்படுகின்றது. நான் நினைக்கின்றேன் கே.பியின் ஊடாகவோ கருணாம்மான், பிள்ளையான், நெடியவன் அல்லது உருத்திர குமார் மணி மாஸ்டர் இவ்வாறு பலரும் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய முன்னாள் தளபதிகள் அல்லது முன்னாள் போராளிகள் பலரும் இருக்கின்றார்கள். ஒருவேளை அவர்களுடன் அணுகுமுறைகளை மேற் கொண்டு ரெலோ, புளட் ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்களுக்கு கடந்த காலங்களிலே இந்திய அரசாங்கம் பயிற்சி வழங்கியது போன்று மீளவும் பயிற்சிகளை வழங்கி மீண்டும் இந்த நாட்டில் இரத்தஆறு ஓடுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகுவதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றது.

ஆகவே கொரோனா சூழ்நிலையை பயன்படுத்தி சீனாவினுடைய இலங்கையில் கால்பதிக்கும் விவகாரம் அதாவது ஒரு நாட்டை கடன் கொடுத்து அதனை அமுலத்தி விட வேண்டும் என்பதிலே சீனா குறியாக இருந்தது. அதற்கு இலங்கை அரசாங்கம் தற்பொழுது இருக்கின்ற ஆட்சியாளர்கள் என்றவகையிலே விலைபோய்விட்டார்கள். விலைபோகும் சூழல் தற்பொழுது உருவாகி விட்டது. ஆகவே இந்த கொரோனா வைரசினுடைய காலத்திலும் எமது அரசியலை கொஞ்சம் நிதானமாக நகர்த்தவேண்டிய சூழல் உள்ளது. உள்ளூர் போர் என்பது பாரிய விளைவுகளை தோற்றுவித்திருக்கின்றது.

ஆனால் தமிழீழவிடுதலைப்புலிகளும் ஏனைய இயக்கங்களும் ஈழக்கோரிக்கையை முன்வைத்து இந்த போராட்டத்தை இலங்கை தீவிலே முன்னெடுத்தார்கள். சில காட்டிக் கொடுப்புகளின் நிமித்தமும் இந்த நாடுகளின் சில தலையீடுகள் நிமித்தமும் அந்த ஈழப் போராட்டம் தற்பொழுது மௌனிக்கப்பட்டிருக்கின்றது. அது புதுவடிவிலே தற்பொழுது உருமாறி வருவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. காரணம் ஆசிய பசுபிக் நாடுகளிலே இந்தியா ஒரு வலுவான நாடாக திகழ்கின்றது. அதனை உடைக்க வேண்டும். இந்தியாவுடன் மோதுவதற்கு சீனாவை தவிர ஆசிய பிராந்தியத்திலே எந்தவொரு நாடும் இல்லை. அனைத்து நாடுகளும் அவர்களுடன் ஒத்துப்போகின்ற நாடுகளாகத்தான் அவர்கள் இருக்கின்றார்கள்.

ஆகவே ஏன் இந்தியாவுடன் நேரடியாக மோத முடியாது என்ற காரணத்தினால் இலங்கையிலே இருக்கின்ற சிங்கள அரசின் ஊடாக இவ்வாறானதொரு காய்நகர்த்தலை நகர்த்தி இந்தியாவினுடைய நடவடிக்கைகள் அனைத்தையும் அல்லது இந்தியாவினுடைய வர்த்தகவடிவம் சம்மந்தமான விடயங்களையே கடந்த காலங்களிலே பண்டமாற்றத்தில் இருந்து இன்றுவரை யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்னரும் இந்தியாவினுடைய உதவிகளையே இந்த அராங்கம் பெற்றுக்கொண்டிருந்தது திடீரென ஈழப்போரின் இறுதிக்கட்டம் வருகின்றபொழுது ஆயுத ரீதியாகவும் சிலசில விடயங்களை சீன அரசு வழங்கியதன் ஊடாக இந்த போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் சார்ந்த விடயங்கள் தற்பொழுது உலக நாடுகளிலே வலுப்பெற்றிருக்கின்ற காலத்திலே பல நாடுகளிலே தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரிக்குமாறு கோரப்பட்ட நிலையிலே பல நாடுகளும் அங்கீகரித்திருக்கின்றன. பல நாடுகளில் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரிக்கின்ற பொழுது இந்த வடகிழக்கிலே ஒரு அரசியல் ரீதியான தீர்வு தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கின்ற வாய்ப்புக்கள் கூட உருவாக்கப்படலாம். இந்தியாவானது இலங்கையை ஒருகட்டத்திலே ஆக்கிரமித்தபொழுது தனக்கு சார்பாக விடுதலைப்புலிகள் செயற்படவில்லை என்பதற்காக அதுபோன்று அப்பொழுது இந்தியாவிற்கு எதிரான போரை போரிடவும் இலங்கை அரசாங்கம் ரணசிங்க பிரேமதாஸ இருந்த காலகட்டத்திலே தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு 5 ஆயிரம் ஆயுதங்களை AK-47 ஐ பாராளுமன்றத்திலே கொடுத்து வாகனங்களை கொடுத்து கருணாம்மான் வெளிப்படையாக தெரிவித்திருந்தார்.

ஆகவே தற்பொழுது ரஜீவ்காந்தியின் கொலையின் பின்னர் தமிழீழவிடுதலைப்புலிகள் எதிரியாகி விட்டார்கள். இனி தமிழர்களுக்கு இருந்த நல்ல சான்றிதழை இல்லாதொழிப்பதற்காக இந்த நடவடிக்கையை இலங்கை அரசாங்கமே தமிழீழவிடுதலைப்புலிகளை வைத்து செய்துவிட்டு தற்பொழுது இந்தியாவை ஒரு பரம எதிரியாக்கிவிட்டார்கள். இன்று இந்தியாவை எதிரியாக்கியதன் பின்னர் ஆப்கானிஸ்தானிலிருந்து எவ்வாறு அமெரிக்க படைகள் 20 வருடத்தின் பின்னர் வெளியேறியதோ அதேபோன்ற வெளியேற்றத்தை இலங்கையிலிருந்து இந்திய இராணுவமும் வெளியேறுகின்றது. இறுதியிலே பலி தீர்க்க வேண்டும் என்ற மனப்பாங்கிலே ஒட்டுமொத்த தமிழர்களையும் ஆயுத போராட்ட குழுக்களையும் பலி வாங்குகின்றனர். அந்த ஆயுத குழுக்களை இந்தியாவிலே தடை செய்யப்படுகின்றது. விடுதலைப்புலிகள் பயங்கரவாத தடைச்சட்டத்திலே கைதுசெய்யப்பட்டார்கள்.

ஆகவே இவ்வாறெல்லாம் நிலைமை மோசமடைந்துகொண்டு செல்கின்றது. தற்பொழுது ஆப்கானை போன்று ஆப்கான் எப்படி அமெரிக்காவை விட்டுவிட்டு தனது வெற்றியை கொண்டாடிவிட்டு சென்றதோ அந்த மக்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தங்களுக்குள்ளேயே அடிபட்டு சாக வேண்டிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. தான் நினைத்தால் ஒரு அணுகுண்டு போட்டுகூட அதனை அழிப்பதற்கான அனைத்து திட்டங்களும் அவர்களிடம் இருக்கின்றது. இன்று கூட இந்த இலங்கைத் தீவானது அமெரிக்காவிற்கும் தேவை இந்தியாவிற்கும் தேவை இந்தியாவும் அமெரிக்காவும் ஏதோவொரு வகையில் ஒத்துப்போகும். ஆனால் சீனாவுடனல்ல.

ஆகவேஇந்தகொரோனாவைரஸைபரப்பியதில் இருந்து கொரோனா வைரஸ் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டது அதை ஆரம்பித்தது யார் என்று பார்த்தால் சீன அரசாங்கம் தான். இவ் கொரோனா வைரஸை பரப்பிய சீனாவுடனேயே இலங்கை அரசு. ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ச அவர்கள் கை கோர்த்திருப்பது மிகவும் மனவேதனைக்குரிய விடயம். இன்னும் பல பிரச்சனைகள் வருவதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது. ஆகவே சீன புலனாய்வாளர்கள் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த நாட்டிலே பணியாளர்களாக பணிபுரிகின்றார்கள். அம்பாந்தோட்டையிலே கொழும்பு துறைமுகத்திலும். ஆகவே இவர்களுடைய செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்களை வடகிழக்கிலிருந்து அவர்களுடைய ஆதிக்கத்தை குறைத்து சீனாவினுடைய அடுத்த கலாச்சாரத்தை உருவாக்கி சீனர்கள் அடுத்த பெரும்பான்மையாக சீனர்களை இந்த நாட்டில் பரப்புவதற்கான செயற்பாட்டைத் தான் இவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களாகிய நாம் முஸ்லிம் மக்களாகிய நாம் சிங்கள மக்களாகிய நாம் ஒரு விடயத்தை தெரிந்து கொள்ள வேண்டும் மீண்டும் இந்த நாட்டில் ஒரு போர் உருவாகுவதற்கு நாம் இடமளிக்க கூடாது. இருந்தாலும் இந்தியா அதனை சாதகமாக பயன்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. அனைத்து கட்டமைப்புக்களையும் வளர்த்துக்கொண்டு வருகின்றது. அனைத்து கட்டமைப்புக்களையும் வளர்த்துக்கொண்டு வருகின்றது. வடகிழக்கு என்றவொரு தமிழர் தாயகம் அமைய ப்பெறுமாக இருந்தால் மட்டுமே அது இந்தியாவிற்கு தொடர்ந்தும் ஒரு பாதுகாப்பாக அமையும்.

**சுழியோடி**

## ஐ.நா கூட்டத்தொடரும், இழுபறியில் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளும்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 48 ஆவதுகூட்டத்தொடர்எதிர்வரும்13ஆம்திகதிஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இங்கு இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகளுக்கு மத்தியில் கடிதம் அனுப்பிய பிரச்சினை பேசு பொருளாக மாறியுள்ளது. கொவிட் அச்சுறுத்தல் நிலைமைகளுக்கு மத்தியில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தொடர், வழமைபோலவே தமிழ் மக்களின் பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் அமையப் போகிறது. பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தீர்வுகள் கிடைக்க ஏதுவாக இக்கூட்டத்தொடர் அமையுமா?

இம்முறைக் கூட்டத்தொடரில் இலங்கையின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச கலந்துகொள்ளவுள்ளதாகவும் அறியக் கிடைத்திருக்கிறது. வழமைபோலவே இம்முறையும் ஜனாதிபதியின் ஐ.நா உரையானது தமிழ் மக்களுக்கு எவ்வித பயனுமில்லாமல், தாம் சார்ந்த குற்றம் இழைத்தவர்களை காப்பாற்றும் நோக்கம் கொண்டதாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இந்நாட்டில் இனப்படு கொலையின் முக்கிய நபர்கள் சுதந்திரமாக இன்னமும் நடமாடித் திரிகிறார்கள். தமிழ் மக்கள் இன்றும் வீதிகளில் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். உல கின் வல்லரசு நாடுகளின் ஆதரவினைப் பெற்றிருக்கும் இலங்கை, தொடர்ந்தும் ஐ.நாவில் காப்பாற்றப்பட்டே வரும். தொடர்ந்தும் ஐ.நாவின் அறிக்கைகளை இலங்கை மறுத்தே வருகிறது. தமிழ் மக்கள் கோரும் சர்வதேச விசாரணை என்கிற பேச்சுக்கே இடமில்லாமல் போயுள்ளது. உள்நாட்டு விசாரணைகள் என இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளை ஏமாற்றி வருகிறது. சாட்சி வழங்கப்போய் எமது மக்கள் அச்சுறுத்தல்களைச் சந்தித்தது தான் மிச்சம்.

ஜெனீவா மனித உரிமை கண்காணிப்பகத்தின் தலைமையதிகாரி திரு.ஜோன் ஃபிசெர் கூற்றுப்படி, இலங்கை அரசாங்கத்தின் நீதி மீதான தாக்குதல் இன்றும் எதிர்காலத்திலும் மனித உரிமை மீறல்களின் அபாயத்தை அதிகரிக்கிறது. ஐ.நா மனித உரிமைகள் கவுன்சில் இதனை வரவிருக்கும் அமர்வில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். இத்தீர்மானமானது ராஜபக்ச நிர்வாகத்திற்கு, இந்த உலகம் அதன் துஸ்பிரயோகங்களை புறக்கணிக்காது என்று நிரூபிக்கவேண்டும். இதன் பலம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் வழங்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். 2020 ஆம் ஆண்டில் பொறுப்புக்கூறலை வழங்குவதற்கான முயற்சிகள் கணிசமாகக் குறைந்துவிட்டன என்று மனித உரிமைகள் கண்கானிப்பகம் தெரிவித்துள்ளது. ராஜபக்ச அரசாங்கத்தின் அத்தனைக் குற்றங்களையும் நிரூபிக்கும் வகையில் தமிழ் மக்களுக்குச் சாதகமான அறிக்கை ஐ.நா கண்கானிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு நீதிவேண்டுமாயின் சர்வதேச நீதிமன்றமே ஒரே வழி. இத்தனைக் குற்றங்களையும் ஒரு இனத்திற்கு எதிராகச் செய்தவர்கள் மனிதர்களை ஏமாற்றலாம், ஆனால் நிச்சயம் கடவுளின் பார்வையில் இருந்து தப்பிக்கவே முடியாது.

**நாட்டில் மேலும் 157 கொவிட் மரணங்கள் நேற்று (11.09.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,152 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் 2802 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 483,280 ஆக அதிகரித்துள்ளது.**

## இன்று 669 பேர் கைது

ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டின்பேரில் கடந்த 24 மணி நேரத்தில் 669 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சோதனை நடவடிக்கைகளின்போது 38 வாகனங்களும் காவல்துறையினரின் கட்டுப்பாட்டின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஊடரங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டின்பேரில் நாட்டில் இதுவரை 69,957 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## இரண்டாவது T20 இன்று

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி இன்று (12) இடம்பெறவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான போட்டி கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்களில் இன்றிரவு 7 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையில் மூன்று இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகள் அடங்கிய தொடர் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளுக்கான சுற்றுலாத்தடை நீக்கம்

இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளுக்கு விதித்திருந்த சுற்றுலா தடையை நீக்குவதாக ஐக்கிய அரபு இராச்சியம் அறிவித்துள்ளது. இதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி பெற்ற கொரோனா தடுப்பூசிகளை இரண்டு தடவையும் பெற்றிருத்தல் வேண்டும். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 15 நாடுகளுக்கு இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, முழுமையான தடுப்பூசிகளை பெற்றுக் கொண்ட சுற்றுலாப் பயணிகளை பெங்கொக்கிற்குள் அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இந்த அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. கொவிட்-19 பரவலை அடுத்து அந்த நாட்டு சுற்றுலாத்துறையை மீள கட்டியெழுப்பும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பெங்கொக் அறிவித்துள்ளது.

## வெற்றி பெற்றார் எம்மா

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் மகளிர் பிரிவுக்கான இறுதி போட்டியில் கனடாவைச் சேர்ந்த 18 வயதான வீராங்கனை எம்மா ரெடுகானு **(Emma Raducanu)** வெற்றிப் பெற்றுள்ளார்.

நியூயோர்க்கில் நகரில் நேற்று இடம்பெற்ற இப்போட்டியில் எம்மா ரெடுகானுடன் கனடாவைச் சேர்ந்த பிறிதொரு வீராங்கனையான 19 வயதுடைய லெலைலா பெர்னான்டஸ் **(Ley lah Fernandez)** போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.



# கொரோனா காலத்தில் கர்ப்பம்தரிப்பது ஆபத்து

இயலுமானால் கர்ப்பம் தரிப்பதனை ஒரு வருடத்துக்கு பிற்போடுமாறு கொழும்பு காசல் மகளிர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் ஹர்ஷ அதபத்து தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்தார்.

தற்போது, உலகளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸின் டெல்டா திரிபின் காரணமாக கர்ப்பிணிப் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு அதிகரித்துள்ளதால் இந்த கோரிக்கையை விடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார். ஒரு வருடம் என்பது மருத்துவ விஞ்ஞானத்துக்கு மிகவும் நீண்டகாலம் என்றும், அந்த காலப் பகுதியில் தற்போது பாவனையிலுள்ள தடுப்பூசிகளை விடவும் சிறந்த தடுப்பூசி உற்பத்தி செய்யப்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். அவ்வாறே, இன்னமும் இந்த வைரஸ் தொடர்பில் சர்வதேச மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை மேற் கொண்டுவருவதாக விசேட வைத்தியர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்த வைரஸின் செயற்பாடு தொடர்பில் மருத்துவ துறையினருக்கு இன்னும் முழுமையான விளக்கம் கிடைக்கப்பெற வில்லை என்றும், மேலும் ஒரு வருட காலத்தினுள் மிகவும் வினைத்திறனான சிகிச்சை முறைகளை கண்டறிய முடியுமானதாக இருக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதன் காரணமாக, இந்த ஆபத்தான காலகட்ட த்தை கடந்ததன் பின்னர் குழந்தை பேறு தொடர்பான எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு. அத்தியாவசிய காரணம் இன்றி குழந்தை தொடர்பான எதிர்பார்ப்புகளை கொண்டுள்ள பெண்களுக்கு விசேட வைத்தியர் ஹர்ஷ அதபத்து கோரிக்கை விடுத்துள்ளார். கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் தொடர்பில் சிந்திக்குமாறு வைத்தியர் மேலும் கோரியுள்ளார்.

அத்துடன், கர்ப்பிணி பெண்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படாது. அதேபோல பாலூட்டும் தாயாக இருந்தால் குழந்தை பிறந்து 6 மாதங்கள் வரை தடுப்பூசி பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இப்பிரிவினர் குறித்தும் இன்னும் ஆய்வு இடம்பெறவில்லை. 6 மாதங்களுக்கு பிறகே தடுப்பூசியை பெறுவதற்கு தகுதிபெறுவர். அதிகளவு ஒவ்வாமை இருப்பவர்கள் தவிர்த்துக் கொள்வதே நல்லது. கொரோனா தடுப்பூசி 2 கட்டங்களாக ஏற்றப்படும். எனவே, முதற் சுற்றில் தடுப்பூசி ஏற்றப்பட்டு, அதனால் அதிகளவு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அவர் இரண்டாவது டோஸை பெறக்கூடாது.

கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் சிகிச்சை நிலையங்களில் இருப்பவர்கள் தடுப்பூசியை பெறமுடியாது. குணமடைந்து இரு வாரங்களின் பின்னர் பெற்றுக்கொள்ளலாம். நானும் தடுப்பூசி ஏற்றிக்கொண்டேன். நலமாக இருக்கின்றேன். கொரோனா தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு சிற்சில உபாதைகள் ஏற்படக்கூடும். ஊசி ஏற்றப்படும் இடம் சிவப்பு நிறமாகலாம். அந்த இடத்தில் வலி ஏற்படலாம். சிலவேளை சிறு அளவில் காய்ச்சல் ஏற்படக்கூடும். நடுக்கல் ஏற்படலாம். சிலருக்கு உணவு அருந்த முடியாது, வாந்தியும் வரக்கூடும். ஆனால், இரு நாட்களில் இயல்பு நிலைக்கு வந்துவிடும். எனினும், கொரோனா தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கு அச்சப்படத் தேவையில்லை. நீங்கள் விரும்பினால் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், தடுப்பூசியை பெற்றுக்கொண்டால் எதிர் காலத்தில் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்ற கருத்தும் சிலர் மத்தியில் நிலவுகின்றது. குறிப்பாக தடுப்பூசியை பெற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் கர்ப்பம்தரிக்க முடியாது என பெண்கள் சிலர் கருதுகின்றனர்.

கர்ப்பமடைந்தாலும் கரு கலைந்து விடலாம் என சிலர் கருதுகின்றனர். அவ்வாறு எதுவும் இல்லை. எனவே, சுகாதார தரப்பினரிடம் ஆலோசனை பெற்று, வைத்தியரிடம் பிரச்சினைகளை எடுத்துரைத்த பின்னர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளலாம். எவராவது கர்ப்பம் தரிக்க விரும்பினால் 3 மாதங்களுக்கு முன்னர் தடுப்பூசியை பெறுவது சிறந்தது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

**கொரோனா காலத்தில் கர்ப்பம்தரிக்கும் பெண்கள் கவனத்திற்கு…**

பெண்கள் கருத்தரிப்பது என்பது அவர்களின் வாழ்வில் ஒரு முக்கியமான அம்சமாகும். அதுவும் முதல் பிரசவம் என்றால் எல்லா விடயமும் வித்தியாசமாகவும், சந்தேகத்துடனும், விளங்காத புதிராக இருக்கும். கர்ப்பகாலத்தில் இயற்கையாக ஏற்படும் சில சின்ன பிரச்சினை கூட பெரிய பிரச்சினையாக தோன்றும். அதே போல சில அரிய உடல்மாற்றங்களும் ஏற்படுவதுண்டு. ஆகையால் கருத்தரிக்க வேண்டும் எனத் திட்டமிடும் போதிலிருந்தே சில அடிப்படை உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றை சுருக்கமாக தெரிந்துக் கொள்ளுங்கள்.



ஆலோசனை பெறுதல் : இதுதான் கர்ப்பம் தரிக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மிக முக்கியம். கருத்தரிக்கும் முன்பு என்னென்ன பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். எப்போது கருத்தரிக்கும் என்பன போன்ற விவரங்களையும், பாதுகாப்பான முறைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

மாதவிலக்கு தள்ளிப்போதல் : கர்ப்பத்தின் அடையாளம் இது. மருந்து மாத்திரைகளின் பக்கவிளைவாலும் இப்படி நேரிடலாம். அடுத்த விலக்குவரும் வரை பொறுத்திருந்து கர்ப்பமானதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

பிரசவ காலம் : கடைசி மாதவிலக்கின் முதல் நாளிலிருந்து கர்ப்ப காலம் கணக்கிடப்படுகிறது. சரியான பிரசவ காலத்தை தெரிந்துக் கொள்ள, கடைசியாக உங்களுக்கு மாதவிலக்கு எப்போது ஆனது என்பதை குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

உணவு : தாய் போதுமான ஊட்டச் சத்துள்ள உணவுகளை உட்கொண்டால்தான் பிறக்கப் போகும் குழந்தை ஆரோக்கியமாக இருக்கும். கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஹோர்மோன் மாற்றங்களால் உணவில் மீது வித்தியாசமான ஆசைகள் ஏற்படலாம். புளிப்பான சுவை கொண்ட உணவுகளை அதிகம் விரும்புவர். முதல் சில மாதங்கள் மசக்கை இருப்பதால் சாப்பிடப்பிடிக்காது. புளிப்பு சுவை கர்ப்பகாலத் தில் அதிகமாக சாப்பிடுவது உடலுக்கு கேடானது என்பதை அறிந்து தவிர்த்து விட வேண்டும். காய்கறிகள், பழங்கள், நார்ச்சத்துள்ள உணவு களை சாப்பிடுவது அவசியம்.

இரத்த சோகை : கருக் காலத்தில் குழந்தை ஒட்சிசன், ஊட்டம் போன்றவை தாயின் இரத்திலிருந்தே அனுப்பப்படுகிறது. எனவே தாய்க்கு கூடுதலான இரத்த உற்பத்தி இருக்க வேண்டும். பழங்கள், கீரைகள் போன்றவற்றை நிறைய சாப்பிட்டால் இரத்த உற்பத்தியும் ஊட்டமும் கிடைக்கும். இல்லா விட்டால் இரத்த சோகை ஏற்படும். இது கர்ப்பிணிக்கு மட்டு மின்றி கருவுக்கும் ஆபத்தை தரும். இரும்புச் சத்து, பாலிக் அமில மாத்திரைகள் போன்றவற்றை சாப்பிட வேண்டும்.

கல்சியம் : குழந்தையின் எலும்பு, பல் உருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு கல்சியம் சத்து தேவை, பால், பால் பொருட்களை அதிகம் சாப்பிட வேண்டும்.

வலிகள்: கருப்பை வளர்த்து முன்னே தள்ளும்போது உடல் சமநிலையை இழந்து தடுமாறும். இதனால் முதுகு வலி வரக்கூடும். கால்களுக்குச் செல்லும் இரத்த நாளங்கள் கருப்பை வளர்ச்சியால் அழுத்தப்படுவதால் கால்கள் வலிக்கும், வாசனைகளை முகர்ந்தால் ஓத்துக்கொள்ளாமல் அவ்வப்போது தலைவலி போன்றவை வரக்கூடும்.

மார்பகங்கள் : கர்ப்பம் தரித்த பிறகுதான் மார்பகத்தின் வளர்ச்சி முழுமையடையும். நிறமாற்றங்கள் ஏற்படும். இரத்த அழுத்தம் அந்தப் பகுதிக்கு அதிகம் செல்வதால் இரத்த நாளங்கள் வீங்கி தொட்டாலே வலிக்கும். மார்பகப்பகுதிகளைச் சுற்றி சின்னச்சின்ன முடிச்சுகள் தோன்ற ஆரம்பிக்கும். இதெல்லாம் மார்பக மாற்றங்கள். இதை ஏதோ பிரச்சினை என நினைத்து பயப்படகூடாது.

மூச்சு திணறல்: கரு வளர்ச்சியடையும் போது கருப்பையானது மேல் நோக்கி அழுத்துவதால் நுரையீரல் முழுமையாக விரிவடைய இயலாது. இதனால் ஆழ்ந்து சுவாசிக்க இயலாமல் அவ்வப்போது மூச்சுத் திணறல் ஏற்படும். இது கர்ப்ப காலத்தில் சாதாரணம்.

மயக்கம் : இரத்த அழுத்தம் அவ்வப் போது குறைந்துவிடுவதால் களைப்பு, கிறுகிறுப்பு, திடீர் மயக்கம் போன்றவை ஏற்படக் கூடும். பட்டினியின்றி சாப்பிட வேண்டும்.

மலச்சிக்கல், மூலநோய் : ஜீரண மண்டலம் மெதுவாகச் செயற்படுவதாலும், ஹார்மோன் மாற்றத்தால் குடல் விரிவடைதாலும் குடலுக்கு உணவுப் பொருட்கள் தள்ளப்படுவரில் தாமதம் ஏற்படும், நீர்ச்சத்துக்களை குடல் உறிஞ்சி விடும். இதனால் மலச்சிக்கல் ஏற்படும். இது தொடர்ந்தால் மூலநோய் வரும். கருப்பை இடுப்புக் கூட்டை அழுத்துவதாலும் ஆசன வாயின் சிரை நாளங்கள் வெளி நோக்கித் தள்ளப்பட்டு மூலக்கட்டிகள் தோன்றும். இந்தப் பிரச்சினை பிரசவத்திற்குப் பிறகு சரியாகிவிடும் என்றாலும் எச்சரிக்கை உணர்வோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

கண்களில் மாற்றம் : திடீர் திடீரென இரத்த அழுத்தம் உயர்வது, குறைவது இயல்பு. ரத்த அழுத்தம் உயர்வதால் கண்களில் ஏதோ திரை விழுந்ததைப் போன்று இருக்கும். பார்வை மங்கலாகும். இதற்குப் பயப்பட வேண்டிய தில்லை. பிரசவத்திற்குப் பிறகு இந்தப் பிரச்சினை சரியாகிவிடும்.

ஈறுகளில் அழற்சி : கர்ப்பத்தின்போது ஈறுகள் மென்மையடைவதால் ஈறுகளில் அழற்சி தோன்றுவது இயல்பு. கடினமான பொருட்களைக் கடிக்காதீர்கள். பல் பாதுகாப்பில் கவனம் செலுத்தங்கள்.

தடையற்ற சிறுநீர் : கர்ப்பத்தின் அழுத்தம் அதிகரிப்பதால் அதிர்ந்து சிரித்தாலோ அல்லது பேசினாலோ சிறுநீர் தானாகப் பிரியும். பத்தாம் மாதவாக்கில் இப்படி சிறு நீர்க்கசிவு தொடர்ந்து இருந்தால் பனிக்குடம் உடைந்திருக்க வாய்ப்பு உண்டு. எனவே மருத்துவரை பார்க்க வேண்டும். இல்லா விட்டால் குழந்தைக்கு ஆபத்து.

உறக்கமின்மை : அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய உணர்வு இருப்பதால் உறக்க மின்மை ஏற்படும். எந்தப் பக்கம் படுத்தால் சரியாக இருக்கும் என்பது தெரியாததாலும் இவ்வாறு ஏற்படும்.

நமைச்சல் - கர்ப்பக் காலத்தில் வயிற்றுப் பகுதியில் வரிக்கோடுகள் தோன்றுவதால் நமைச்சலெடுக்கும். உடல் முழுவதும் நமைச்சலெடுத்தால் கல்லீரல் பாதிப்பிருக்கலாம். இந்த பிரச்சினை அதிகமாக இருந்தால் மருத்துவரின் ஆலோசனைப் பெறுவது நல்லது.

மூட்டுகள் : கர்ப்ப காலத்தில் ஹார்மோன் மாற்றங்கள் உண்டாவதால் தசைநார்கள் தளர்ந்து மென்மையடைந்து விடும். இதனால் உடலிலுள்ள மூட்டுகளில் வலி ஏற்படும். ஓய்வு எடுப்பது, உறங்குவது ஆகியவற்றை மேற்கொள்ளலாம். மருத்துவ ஆலோசனையும் தேவை.

பாலுறவுசிந்தனைகள் : ஹார்மோனின் ஏற்ற இற்றங்களால் பாலுறவு அதிகரிப்பதும், குறைவதும் கர்ப்பக் காலத்தில் இயல்பு.

மனநிலையில்மாற்றம் : தாய்மையை நினைத்து சந்தோஷப்பட்டாலும், உடலில் ஏற்படும் மாற்றங்கள், பிரசவத்தைப் பற்றி பயம் ஆகியவற்றால் திடீரென பயம், கவலை போன்ற மனமாற்றங்கள் வரலாம். அழுதாலும் பிள்ளை அவள் தானே பெறவேண்டும். கருக்காலத்தில் அதிகமாக வீடு மற்றும் வெளி வேலை செய்வதால் எரிச்சல், கோபம், சோர்வு போன்றவை ஏற்பட்டு அதன் காரணமாக மன நிலையில் மாறுதல் வரலாம்.

நீர்கோர்த்தல் : கர்ப்ப காலத்தில் உடலில் நீர்கோர்த்தல், பனிக் குடத்தில் நீர் சேருதல் இயல்பு. இதனால் கை, கால்களில் வீக்கம் வருவதும் இயல்பு. பயப்பட வேண்டாம். நடை பயிற்சி செய்யுங்கள் ஓய்வெடுங்கள்.

இதயத் துடிப்பு : கர்ப்ப காலத்தில் இதயம் மிக அதிகமாகத் தூண்டப்படுவதால் படபடப்பு அதிகமாகும். பயம் வேண்டாம்.

சருமம் : சருமத்தில் வரிக்கோடுகள் தோன்றும். இளமையான சருமம் இப்போது மாறத் தொடங்கும். இது இயல்பு. பெரும் பாலானவை மறைந்து விடும், சில கோடுகள் இறுதிவரை நீடித்திருக்கும்.

எடை அதிகரிப்பு : கர்ப்ப காலத்தில் 12 கிலோவரை எடை அதிகரிக்கும். இதில் குழந்தையின் எடை, நஞ்சு, தொப்புள்கொடி போன்றவற்றின் எடை, கொழுப்பு போன்றவை அடங்கும்.

கரு நெளிதல் : 18 20 வாரங்களில் முதன் முறையாக கரு நெளிதல் ஏற்படும். குழந்தையின் உதைப்பு வலித்தாலும், இன்பம் தரக்கூடியது. இந்த உதைப்பு குறைந்து விட்டால் மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

வேலை, ஓய்வு : கர்ப்பக் காலம் முதல் பிரசவத்திற்குத் தயாராவது என வேலை செய்வதில் தவறில்லை. ஆனால் போதுமான ஓய்வு தேவை, அலைச்சல் இருக்கக்கூடாது. கர்ப்பம் தரிப்பதற்கு முன்பிருந்தே மருந்து மாத்திரை பயன்படுத்த வேண்டியிருந்தால் டாக்டரைக் கேட்டு அதன்படி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் குழந்தை உருவாகும் போதே குறைபாடுகள் தோன்றலாம்.

பிரசவம் : பிரசவிக்கும் போது வலி இருக்கத்தான் செய்யும். இந்த வலி பத்து நிமிடங்கள் அல்லது அதிகமாகக் கூட இருக்கலாம். குழந்தை பிறப்பதற்கு வசதியாக அமைந்திருந்தால் சாதாரணமாகப் பிறந்துவிடும். இல்லாவிட்டால் சிசேரியன்

தொகுப்பு :- சப்தகி



# பிராந்திய செய்திகள்



## மேலிடத்தின் எவ்வித அறிவுறுத்தலும் இன்றி வெள்ளைப்பூடு விற்ற அதிகாரி

சதொச நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட வெள்ளைப்பூடு தொகையொன்று மேலிடத்தின் எவ்வித அறிவுறுத்தலும் இன்றி மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளை பணி இடைநீக்குமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரினால் சதொச தலைவருக்கு மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிக்கு இந்த உத்தரவு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையினால் கடந்த தினம் சதொச நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 2 கொள்கலன் வெள்ளைப்பூடு தொகையே இவ்வாறு மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து விரைவில் அறிக்கையிடுமாறு அமைச்சர், சதொச தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யுமாறு அமைச்சர் பந்துல குணவர்தன சதொச தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 69,288 பேர் கைது



தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 639 பேர் கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது 40 வாகனங்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 69,288 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

## ஏழு நாட்களுக்கு தபால் நிலையங்கள் திறப்பு

நாட்டில் உள்ள அனைத்து தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்களும் அன்று (10) முதல் திறக்கப்படும் என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

ஓய்வூதியம் உள்ளிட்ட கொடுப்பனவுகளை வழங்குவதற்காக தபால் நிலையங்கள் திறக்கப்படுவதாக அவர் கூறினார்.

அதன்படி, அன்று(10) முதல் ஏழு நாட்களுக்கு தபால் நிலையங்கள் திறந்திருக்கும்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களின் செப்டம்பர் மாத ஓய்வூதியங்கள் அன்று(10) முதல் செலுத்தப்படும்.

அத்துடன் முதியோர் உதவித்தொகை, விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் மீனவர் ஓய்வூதியத்தை செலுத்துவதற்காகவும், தபால் மற்றும் உப தபால் நிலையங்கள் திறந்திருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த இளம் தாய் கொரோனாவுக்கு பலி!

இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த தாயார் கொவிட்-19 நோயினால் பரிதாபமாக உயிரிழந்தார்.

இணுவிலைச் சேர்ந்த அஜந்தன் இனியா (வயது-25) என்ற பெண் இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

குழந்தைகள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

"கடந்த 4ஆம் திகதி கர்ப்பிணிப் பெண்ணுக்கு மூச்செடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் அன்றைய தினம் தெல்லிப்பலை வைத்தியசாயில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அன்றைய தினமே அவருக்கு கொவிட்-19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றுமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

அதன் பின்னர் தாயாருக்கான சிகிச்சைகள் தொடர்ந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் முன்னெடுத்தார். சடலம் சுகாதார முறைப்படி தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

## பாடசாலைகளை மீள திறப்பது குறித்த பரிந்துரைகளை கொவிட் ஒழிப்பு குழுவில் சமர்ப்பிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

பாடசாலைகளை மீள திறப்பது தொடர்பிலான பரிந்துரைகளை எதிர்வரும் கொவிட் ஒழிப்பு விசேட குழுவில் முன்வைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை இரண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அதற்கமைய, புத்திஜீவிகள் குழு, கல்வி அமைச்சு மற்றும் சுகாதார தரப்பினரின் ஆலோசனைகளையும் பெற்று அவற்றையும் கொவிட் ஒழிப்பு விசேட குழுவில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் இதன் போது கூறினார்.

குறித்த புத்திஜீவிகள் குழுவின் கூட்டம் அடுத்த வாரமளவில் நடைபெறவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## பலத்த காற்றினால் அம்பாறையில் 23 வீடுகள் சேதம்

அம்பாறை - தமன பகுதியை ஊடறுத்து வீசிய கடும் காற்றினால் 23 வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளது.

அன்று (10) மாலை வீசிய பலத்த காற்றினால் தேவாலஹிந்த பகுதியில் 21 வீடுகளுக்கும் திம்பிரிகொல்ல பகுதியில் 02 வீடுகளுக்கும் சேதமேற்பட்டுள்ளதாக தமன பிரதேச செயலாளர் உதார நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

தேவாலஹிந்த பகுதியில் 06 வீடுகளுக்கு பாரிய சேதமேற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

குறித்த பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகள், அன்றைய தினம் (11) வழங்கிவைக்கப்படுமென தமன பிரதேச செயலாளர் உதார நாணாயக்கார கூறியுள்ளார்.





# சினிமா துளிகள்



## கார்த்திக்கை தொடர்ந்து செம்பருத்தி சீரியலின் இந்த முக்கிய நாயகியும் விலகுகிறாரா?

சீரியல் மக்களின் மனதில் நிற்க வேண்டும் என்றால் அதற்கு கதை மிகவும் நன்றாக இருக்க வேண்டும்.

இப்போது உள்ள சீரியல்கள் இடையில் இடையில் தான் மக்களிடம் நிறைய ரீச் ஆகிறது. ஒரு குறிப்பிட்ட கதைக்களம் சுவாரஸ்யமாக இருந்தால் சீரியலின் புரொமோ அவர்களது கண்ணில் பட்டால் பார்க்கிறார்கள்.

TRPயில் பெரிய சாதனை செய்ய எல்லா சீரியல் குழுவினரும் போராடி தான் வருகிறார்கள். அப்படி ஒரு காலகட்டத்தில் ஹிட் சீரியலாக இருந்தது ஜீ தமிழில் ஒளிபரப்பான செம்பருத்தி.

இதன் முக்கிய நாயகன் மாற்றம் எப்போது நடந்ததோ அப்போதே சீரியல் டல் அடிக்க ஆரம்பித்தது. தற்போது வந்த ஒரு அதிரடி தகவல் என்னவென்றால் சீரியலின் முக்கிய நாயகியான பிரியா ராமன் செம்பருத்தி சீரியலில் இருந்து விரைவில் விலக இருப்பதாக செய்திகள் வருகின்றன.



## ஒரே நாளில் ரிலீசாகும் ஆர்யாவின் 2 படங்கள்?

நடிகர் ஆர்யா நடித்த 'சார்பட்டா பரம்பரை' படம் ஓடிடி-யில் வெளியான நிலையில், அவர் அடுத்ததாக நடித்துள்ள 2 படங்களும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

அரிமா நம்பி, இருமுகன் ஆகிய படங்களை இயக்கி பிரபலமான ஆனந்த் சங்கர், அடுத்ததாக இயக்கும் படம் 'எனிமி'. இப்படத்தில் விஷால் ஹீரோவாகவும், ஆர்யா வில்லனாகவும் நடித்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

'எனிமி' படம் வருகிற அக்டோபர் மாதம் 14-ந் திகதி ஆயுத பூஜை பண்டிகையை யொட்டி வெளியிடப்படும் என படக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளது.

அதேபோல் சுந்தர் சி இயக்கத்தில் ஆர்யா நடித்துள்ள 'அரண்மனை 3' படமும் அதே தினத்தில் ரிலீசாக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விரைவில் இப் படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இந்த இரண்டு திரைப்படங்களும் திரையரங்குகளில் வெளியிடப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.



## சிக்ஸ் பேக்குடன் போஸ் கொடுத்து நடிகை சமந்தா..

தென்னிந்திய திரையுலகில் பிரபலமானவர் நடிகை சமந்தா. தி பேமிலி மேன் சீரிஸ் மூலம் இந்தியிலும் அறிமுகமாகி விட்டார். இவர் நடிப்பில் தற்போது காத்துவாக்குல ரெண்டு காதல் படம் தமிழில் உருவாகி வருகிறது. அதே போல் தெலுங்கில் மிகவும் பிரமாண்டமாக உருவாகி வந்த சகுந்தலம் திரைப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தான், நிறைவடைந்தது.



மேலும், தி பேமிலி மேன் வெப் சீரிஸில் நடித்ததற்காக சிறந்த நடிகை என்றும் விருதையும் பெற்றுள்ளார்.நடிகை சமந்தா அவ்வப்போது போட்டோ ஷூட் நடத்தி, ரசிகர்களை கவரும் வகையில் புகைப்படங்களை வெளியிடுவார். அந்த வகையில் தற்போது சிக்ஸ் பேக்குடன் போஸ் கொடுத்து, ரசிகர்களை கவர்ந்துள்ளார் சமந்தா.

## சிம்பு திருமணத்திற்கு பிறகு தான் என் திருமணம் - நடிகர் ஜெய்

நடிகர் ஜெய் கைவசம் பிரேக்கிங் நியூஸ், பார்ட்டி, எண்ணித்துணிக, சிவ சிவா, குற்றமே குற்றம் ஆகிய படங்கள் உள்ளன. தமிழ் திரைப்பட பத்திரிகையாளர்கள் சங்கத்தின் விழா சென்னையில் நடைபெற்றது. இதில் நடிகர் ஜெய் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

அதில் பேசும் போது, பகவதி படத்தில் விஜய் சாருடன் இணைந்து நடித்தேன். அதன் பிறகு அவருடன் மீண்டும் சேர்ந்து நடிக்க வேண்டும் என்று இதுவரை 150 தடவை வாய்ப்பு கேட்டு விட்டேன். ஆனால், அவர் நீ தான் ஹீரோ ஆகிட்ட இல்ல.. அப்புறம் ஏன்.. என்று கேட்டு விட்டார்.



திருமணம் எப்போது என்ற கேள்விக்கு, 'சிம்பு திருமணத்திற்கு பிறகு நான் திருமணம் செய்து கொள்வேன். அனேகமாக சிம்புக்கு அடுத்த வருடம் திருமணம் நடந்து விடும் என்று நினைக்கிறேன்' என பதிலளித்தார் ஜெய்.

நடிகர் ஜெய் கைவசம் பிரேக்கிங் நியூஸ், பார்ட்டி, எண்ணித்துணிக, சிவ சிவா, குற்றமே குற்றம் ஆகிய படங்கள் உள்ளன. இதுதவிர பெயரிடப்படாத புதிய படத்தில் நடிகர் ஜெய், சுந்தர் சி-க்கு வில்லனாக நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 17 வயது நடிகையுடன் ஜோடி சேர மறுத்த நடிகர் விஜய் சேதுபதி

தமிழ் திரையுலகில் பிசியான நடிகராக வலம் வருபவர் நடிகர் விஜய் சேதுபதி. இவர் தெலுங்கில் வில்லனாக அறிமுகமான படம் உப்பென்னா. இப்படத்தில் நாயகி கீர்த்தி ஷெட்டிக்கு தந்தையாகவும், கொடூர வில்லனாகவும் மிரட்டி இருந்தார்.

இந்நிலையில், நடிகர் விஜய் சேதுபதி, தமிழில் நடிக்க உள்ள புதிய படத்தில், அவருக்கு ஜோடியாக தெலுங்கு நடிகை கீர்த்தி ஷெட்டியை நடிக்க வைக்க படக்குழு முயற்சி செய்து ள்ளது. இதை அறிந்த விஜய் சேதுபதி, கீர்த்தி ஷெட்டியுடன் நடிக்க மாட்டேன் என சொல்லிவிட்டதாக தகவல் வெளியா கியுள்ளது.



ஏனென்றால், தனக்கு மகளாக நடித்த நடிகையுடன் ஜோடியாக நடிப்பதை அவருக்கு விரும்பவில்லை என விஜய் சேதுபதி கூறியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்படத்தில் கீர்த்தி ஷெட்டிக்கு பதிலாக, வேறு நடிகையை நடிக்க வைக்க படக்குழு முடிவு செய்துள்ளதாம்.



# பல்சுவை கதம்பம்



## தினமும் கொண்டைக்கடலை சாப்பிட்டு வருவதால் இத்தனை நன்மைகளா...?



கொண்டைக்கடலையில் அதிக அளவு புரதச்சத்துக்கள் நிறைந்துள்ளது. முடி, நகம் மற்றும் உடல் வளர்ச்சிக்கு புரோட்டீன் சத்து மிக முக்கியம். எனவே தினமும் 100 கிராம் கொண்டைக் கடலையினை உட்கொண்டு வரவது நல்லது.

கொண்டைக் கடலையில் அதிக அளவு கல்சியம் மற்றும் மெக்னீசியம் சத்துக்கள் உள்ளது. உங்கள் உணவுகளில் உள்ள கல்சியம் சத்தினை உரிய மெக்னீசியம் சாது மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

கொண்டைக் கடலை எலும்பு மற்றும் பற்களின் வலிமையினை அதிகரிக்கின்றது. எனவே உடல் உழைப்பு அதிகம் உள்ளவர்கள் தினமும் கொண்டைக் கடலையினை உட்கொண்டு வந்தால் நிறைய பயன் பெறலாம்.

கொண்டைக் கடலையில் அதிக அளவு நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளது. 100 கிராம் கொண்டைக் கடலையில் கிட்டத்தட்ட 19 கிராம் நார்சத்து நிறைந்துள்ளது. உடல் எடையினை குறைக்க நார்சத்து முக்கியம். தினமும் நார்சத்து உணவினை உண்டு வருபவர்களுக்கு மலசிக்கல் பிரச்சினை ஏற்படாமல் தடுக்க உதவும்.

கொண்டைக்கடலையில் அதிக அளவு பொட்டாசியம் நிறைந்துள்ளது. உங்கள் இரத்த அழுத்தத்தினை கட்டுக்குள் வைக்க பொட்டாசியம் சாது மிக மிக முக்கியம். உயர் இரத்த அழுத்தம் உடையவர்கள் தினமும் கொண்டைக்கடலையை ஒரு கைப்பிடி உண்டு வந்தால் அவர்களின் இரத்த அழுத்தம் குறைந்து ஆரோக்கியம் மேம்படும்.

## அற்புத பலன்களை அள்ளித்தரும் எலுமிச்சை சாறு !!

எலுமிச்சை சாற்றிலுள்ள அதிகமான விட்டமின் 'சி' சத்தும், ரிபோஃப்ளோவினும் புண்களை ஆற்ற வல்லது. எலுமிச்சை சாறுடன் நீர் கலந்து சிட்டிகை உப்பு போட்டு தொண்டையில் படுமாறு பலமுறை கொப்பளிக்க தொண்டைப் புண், வாய்ப்புண் ஆறும்.

எலுமிச்சைச் சாறுடன் நீர் கலந்து அடிக்கடி வாய் கொப்பளித்தால் வாய் துர் நாற்றம் மறையும். எலுமிச்சைச் சாறுடன், இஞ்சிச் சாறு, சிறிதளவு தேன் சேர்த்து, வெது வெதுப்பான நீரில் கலந்து சாப்பிட விரைவில் குணம் தெரியும்.

எலுமிச்சைச் சாறுடன் வெந்நீர் கலந்து குடிக்கும் போது நெஞ்செரிச்சல், ஏப்பம், வயிறு உப்புசம் குறையும். ஜீரணசக்தியும் அதிகரிக்கும். கல்லீரலைப் பலப்படுத்த சிறந்த டானிக் எலுமிச்சை. பித்தநீர் சரியான அளவில் சுரக்க வழிசெய்கிறது. பித்தப்பையில் ஏற்படும் கற்களைக் கரைக்க உதவுகிறது.



சருமப் புண்களுக்கு ஆன்டிசெப்டிக்காகப் பயன்படுகிறது. எலுமிச்சைச் சாற்றை முகத்தில் தடவிவர, முகத்திலுள்ள கரும்புள்ளிகள் மற்றும் சுருக்கங்கள் மறைகின்றன.

தினமும் காலையில் வெறும் வயிற்றில் இளஞ்சூடான நீரில் எலுமிச்சைச் சாறு, ஒரு டீஸ்பூன் தேனுடன் பருகி வர உடல் எடை குறையும். இரவு நேரத்தில் வெது வெதுப்பான நீரில், எலுமிச்சைச் சாறுடன் தேன் கலந்து குடித்தால் நல்ல தூக்கம் வரும். உடல் மட்டுமின்றி, மனமும் அமைதி அடையும்.

மனஅழுத்தம், ஸ்ட்ரெஸ், நீங்கும். உடலிலிருந்து நச்சுப் பொருள்களையும், பாக்டீரியாக் களையும் வெளியேற்றி மூட்டுவலிக்கு நிவாரணம் அளிக்கிறது. காலரா, மலேரியா போன்ற காய்ச்சலின் போது விஷக்கிருமிகளின் தாக்கத்தை நீக்கப் பெரிதும் உதவுகிறது.

சில துளிகள் எலுமிச்சைச் சாறை நீர் கலக்காமல் அப்படியே விட்டுக் கொண்டால் நாக்கின் சுவை அரும்புகள் தூண்டப்பட்டு, சுவை தெரியும்.

தலையில் பொடுகுத் தொல்லை நீங்க, எலுமிச்சைச் சாறினை தடவி சிறிது நேரம் ஊறிய பின் குளித்தால், பொடுகுத் தொல்லை நீங்கும். எலுமிச்சை பழச்சாற்றை தலையில் தேய்த்து தலை முழுகி வர பித்தம், வெறி, உடல் சூடு அடங்கும்.

தேள்கொட்டினால், அந்த இடத்தில் எலுமிச்சை பழத்தை இரண்டாக நறுக்கி இரண்டு துண்டையும் தேய்க்க விஷம் இறங்கும்.

## பச்சை பாசிப்பயறு மாவை பயன்படுத்தி சருமத்தை பொலிவாக்க உதவும் குறிப்புகள் !!

பாசிப்பயறு மாவை தினமும் முகத்திற்கு பயன்படுத்தினால், முகத்தில் ஆங்காங்கு உள்ள முகப்பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள் மறைந்து, முகம் பொலிவாகும்.


1 ஸ்பூன் பாசிப்பயறு மாவை, எடுத்து அதனுடன் 1/2 ஸ்பூன் தேன் கலந்து முகத்தில் தடவுங்கள். 10 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும். தினமும் இதனை தொடர்ந்து செய்து வந்தால் ஒரே வாரத்தில் முகப்பருக்கள் மட்டுமின்றி அதன் தழும்புகளும் மறைந்து விடும்.

சில பெண்களுக்கு முழங்கை மற்றும் கழுத்துகளில் கருமையாக இருக்கும். இத்தகைய கருமையைப் போக்குவதற்கு ஒரு அருமையான மாஸ்க் என்றால் அது பாசிப்பயறு மாவு மாஸ்க் தான். அதற்கு பாசிப்பயறு மாவில் தயிர் மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து கலந்து கருமையாக உள்ள இடங்களில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். பின்னர் நல்லெண்ணெய் கொண்டு மசாஜ் செய்தால் கருமை விரைவில் போய்விடும்.

1 ஸ்பூன் பாசிப்பயறு பொடியுடன் 2 ஸ்பூன் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் மாஸ்க் போல் போடுங்கள். 10 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். தினமும் இதனை செய்து வந்தால் சரும நிறம் அதிகரிக்கும். உங்களுக்கு வறண்ட சருமமாக இருந்தால் எலுமிச்சை சாறுக்கு பதிலாக பால் கலந்து பயன்படுத்தலாம்.

சில பெண்களுக்கு முகம் மற்றும் வாய்க்கு மேலே மீசை போன்று முடி வளரும். அத்தகைய முடியின் வளர்ச்சியை தடுப்பதற்கு பாசிப்பயறு மாவில் மஞ்சள் தூளை சேர்த்து நீர் ஊற்றி பேஸ்ட் செய்து தினமும் காலை மற்றும் மாலையில் முடி வளரும் இடத்தில் தடவி ஊற வைத்து கழுவி வந்தால் நாளடைவில் முடியின் வளர்ச்சி தடைபடுவதை உணரலாம்.

அன்றாடம் பாசிப்பயறு மாவை முகம் மற்றும் உடல் முழுவதும் தேய்த்து குளித்து வந்தால், சருமத்தில் உள்ள சுருக்கங்கள் நீங்கும். மேலும் பாசிப்பயறு பொடியை 1 ஸ்பூன் எடுத்து அதனுடன் ரோஸ் வாட்டரை கலந்து கொள்ளுங்கள். இதனை முகம், கழுத்து பகுதியில் தடவி மசாஜ் செய்ய வேண்டும். பின்னர் 20 நிமிடங்கள் கழித்து கழுவுங்கள். தினமும் இரவில் இப்படி செய்து வந்தால் சுருக்கங்கள் மறைந்து இளமையாக காணப்படு வீர்கள்.



# சீனாவின் கம்யூனிஸ்ட் ஆட்சி - காய்நகர்தல்களிலிருந்து இலங்கை தப்பித்துக்கொள்ளுமா?

இலங்கை பொருளாதார அவசர நிலை (Economic Emergency) என்று கூறும்பொழுது என்னுடைய தொப்புள்கொடி உறவுகள் வாழுகின்ற நாடு இலங்கை. அந்த இலங்கையில் இப்படியொரு நிலைமையா என்பது தான் எங்களுக்கு மிக வருத்தமாக இருக்கின்றது. இந்த வருத்தத்திற்கு காரணம் என்னவென்றால் அங்கு நடக்கின்ற அரசாங்கம் தான். ஒரு அரசாங்கம் எப்படி இருக்கும். அதாவது ஜனநாயக ஆட்சி அல்லது ஜனநாயகம் என்பது தான் இலங்கையில் அனைவராலும் போற்றப்படுகின்றது. அப்படிப்பட்ட ஜனநாயக ஆட்சியில் 8 நபர்கள் மிக முக்கியமான நபர்கள் இலங்கை வரலாறிலே அப்படியொரு வரலாறு நடந்ததே இல்லை. நிதி அமைச்சகமாக இருக்கட்டும் அல்லது பொருளாதாரம் பொலிஸாகட்டும் பாதுகாப்புதுறையாக இருக்க ட்டும் இது மூன்றுமே ஒரு குடும்பத் திற்கு கீழ் இருக்கின்றது. **ராஜபக்ச கோட்டபாய ராஜபக்ச பசில் ராஜபக்ச இவ்வாறு இவர்களுடைய குடும்பத்திற்கு கீழேயே இப்பொழுது இலங்கை முழுவதுமாக அடிமைப் பட்டுகிடக்கின்றது என்று சொல்லலாம்.** இந்த மூன்று நபர்கள் தானா என்று பார்த்தால் இல்லையாம் அவங்களுடைய குடும்பம் என்று பார்த்தால் கிட்டத்தட்ட 8 நபர்கள் இருக்கின்றார்கள். இந்த உலகத்திலேயே மன்னர் ஆட்சியில் கூட 8 நபர்கள் சேர்ந்து ஒரு அரசாங்கத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பி ல்லை என்று சொல்கின்றார்கள்.

ஆகவே இலங்கையில் நடப்பது என்ன வென்று பார்த்தால் இலங்கையில் CCP வகையான ஒரு ஆட்சி நடைபெறுகின்றது என்று சொல்கின்றார்கள். CCP என்றால் Chinese Communist Party என்பது தான். ஆகவே சீன கம்யூனிஸ்ட் கட்சி (Chinese Communist Party வழியாகத் தான் எங்களுடைய அரசியலும் நடந்து வருகின்றது என்று கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஒரு வருடத்திற்கு முன்னரே கூறினார். 2019 இல் இருந்தே இலங்கைக்கு நல்ல நேரம் இல்லை. நன்றாக கவனித்தால் தெரியும் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியானதே 2019 இல் தான். அதே மாதிரி சில தேவாலயங்களில் குண்டு வெடித்ததும் அந்த குண்டு வெடிப்பின் பின்னர் அங்கு சுற்றுலா முழுவதுமாக முடங்கி யதும் அந்த பொருளாதாரத்தை மறுபடியும் விழ்ச்சிக்கு தள்ளியது. அடுத் ததாக 6 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னதும் அம்பாந்தோட்டை துறை முகத்தை சீனாவிற்கே விட்டுக்கொடுத்திட்டார்கள். இதே போன்று கடன் தொகை கூடி கூடி வருகின்ற பொழுது இந்த இலங்கை சீனாவிற்கு அடிமையாக இருந்து வருகின்றது என்ப தற்கு இரண்டு பறை சாற்றும் நிகழ்வுகள் நடை பெற்றது.

ஒன்றுசீனாவினுடையகம்னீசியகட்சியினுடைய 100வது ஆண்டு தினம். அந்த 100வது ஆண்டு தினத்திற்கு இலங்கையின் சார்பாக ஒரு தங்க நாணயம் என்பது வெளியிடப்பட்டது. இதுவரையிலும் இலங்கையினுடைய வரலாறுகளில் ஒரு நாட்டிற்காக நாட்டினுடைய தியாகிகளுக்காக இல்லை ஒரு நாடு நமக்கு நல்லது செய்கின்றது என்பதற்காக வேறு ஒரு நாட்டிற்காக இவ்வாறான தங்க நாணயம் என்பது எல்லாம் இறக்கிவிடுவார்கள். ஆனால் ஒரு அரசியல் கட்சிக்காக Chinese Com munist Party என்ற அரசியல் கட்சிக்காக இலங்கை நாட்டின் சார்பாக ஒரு நாணயம் என்பது வெளியிடப்படுகின்றது. இது மிகப்பெரிய வருத்தத்தை பல நபர்களுக்கும் தந்தது என்று சொல்லலாம். ஏனென்றால் நாம் அந்தளவுக்கு அடிமைப்பட்டிருக்கின்றோம் என்பது தான்.

தற்பொழுது இலங்கை ஒரு கைக்கம்னிசை அமைத்தார்கள். 2020 ஆம் ஆண்டிலே அந்த கைக்கம்னீசிய தலைவர் இவர் தான் என்று சொல்லி மிலிந்த மொறகொட என்பவருக்கு பெயர் அடிபட்டது. ஆனால் அந்த மிலிந்த மொறகொட என்பவர் வராமலே இருந்தார். 2021 இல் அவர் பொறுப்பேற்றுவிட்டார். 2021 இல் ஒரு அறிக்கை வெளியாகியிருக்கின்றது. மிலிந்த அவர்கள் அந்த தவலை வெளி யிட்டிருக்கிறார்கள். நீங்கள் சீனாவின் பக்கம் சாய்ந்து கொண்டிருக்கிறீர்கள் அவ்வாறு சாயக்கூடாது நீங்கள் என்ன செய்ய வேண்டும் இந்தியாவின் பக்கம் வரவேண்டும். மிலிந்த மொறகொட என்ன சொன்னாரென்றால் நீங்கள் அடிக்கடி என்ன செய்ய வேண்டும் இந்தியாவுடன் நிறைய போர் ஒத்திகையில் ஈடுபடவேண்டும் இந்தியா கொடுக்கவேண்டிய கொஞ்ச தொகை இருக்கின்றது கடன் உச்ச வரம்பு என்று சொல்வார்கள் அந்த கடன் உச்ச வரம்பு என்பதை பயன்படுத்த வேண்டும். இந்தியாவிற்கு சார்பாக இருக்கின்ற பல நபர்களுடன் அவர்களுடைய பொருளா தாரதை மேம்படுத்தும் விதமாக வியாபாரத்தை பெருக்க வேண்டும். இவ்வாறு இலங்கையி னுடைய கைக்கம்னிஸ் அறிக்கை வெளியி ட்டிருக்கின்றார்கள். இந்த தகவலை வெளியி ட்ட தன் காரணமே கோட்டபாய ராஜபக்ச என்று சொல்லலாம். **கோட்டபாய ராஜபக்ச என்ன சொல்லி வந்தார் என்றால் நான் எந்த அணி சேரவும் மாட்டேன். சீனாவின் பக்கமும் போக மாட்டேன் இந்தியாவின் பக்கமும் போக மாட் டேன். எங்களது நாட்டிற்கு யார் நல்லது செய் கின்றார்களோ அவர்களுடைய பக்கம் அல்லது அனைத்து நாடுகளினதும் நட்பும் நமக்கு கிடை க்கும் என்று சொல்லியிருக்கார்.**

ஆனால் தற்பொழுது முழுமையாகவே இது சீனாவின் பக்கம் போவதால் அங்கு இருக்கும் மக்களுக்கும் அங்கிருக்கும் எர்வாமன்டுக்கும் பொருளாதாரத்திற்கும் பல சிக்கல்கள் வந்திருக் கின்றது. அதனால் தான் இந்த பொருளாதார அவசர நிலை என்பது கொண்டுவரப்பட்டது அல்லது பொருளாதார அவசர நிலை என்ற கட்டாய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக் கின்றது என்று சொல்லலாம். இலங்கை பொருளாதார அவசரநிலை என்று சொல்லும் பொழுது அவர்களுடைய கடன் என்பது 101 சதவீதமாக இருக்கிறது. ஆகவே கடன் என்பது மொத்த வருமானத்தில் 101 சதவீதம் அதிகரி த்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்தியா வை கணக்கெடுத்து பார்த்தால் 138 கோடி மனித ர்கள் இருக்கினற் இந்தியாவை பார்த் தால் அது 26 சதவீதமாக இருக்கிறது. ஆகவே இவ்வளவு பெரிய மக்கள் தொகை கொண்ட நாடு என்று சொல்லும் போது இந்த நாட்டில் நிலம் என்பதும் இருக்கிறது. அதாவது நிலம் சார்ந்த தொழில்கள் தொழிற்சாலைகள் இது எல்லாமே இருக்கின்ற இந்திய நாட்டிலேயே 26 சதவீதமாக இருக்கும் போதே இலங்கையி ல் அது 101 சதவீதமாக இருப்பது மிகப்பெரும் அச்சுறுத்தலாக நாம் பார்க்க வேண்டும்.

சரி எங்கிருந்து இலங்கை அரசாங்கம் கடன் வாங்கியிருக்கின்றது. சீனாவிடம் இருந்து கிடையாது என்று சொல்பவர்களுக்கு இலங்கை அரசாங்கமே வெளியிட்ட சில பல வரைபு இருக்கு. 10 சதவீதம் அவர்களுடைய கடன் சீனாவினுடைய அந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறது. 10 சதவீதம் ஜப்பானிட மிருந்து வாங்கியிருக்கிறார்கள் 47 சதவீதம் சர்வதேச மூலதன சந்தைலிருந்து(Intern ational Capital Market) வாங்கியிருக்கி றார்கள் பலதரப்பு வளர்ச்சி வங்கியிடம் (Mult ilateral Development bank) இடமி ருந்து ஒரு 22 சதவீதம் வாங்கியிருக்கிறார்கள். இந்தியாவிடமிருந்து 4.5 சதவீதம் வாங்கி யிருக்க வாய்ப்பு இருக்கிறது. நான் சொன்ன வார்த்தையில் சீனாவிடமிருந்து 10 சதவீதம் தான் வாங்கியிருக்கிறது என்று கூறினேன் பார்த்தீர்களா ஆனால் இன்னொரு வார்த்தையை கூறினேன் சர்வதேச மூலதன சந்தை என்று கூறினேன் பாருங்கள் பல நிறுவனங்களிடமிருந்து 47 சதவீதம் கடன் வாங்கியிருக்கிறது என்று கூறினேன் இந்த நிறுவனங்களில் பாதிக்கு மேற்பட்ட நிறுவன ங்கள் சீனாவை சேர்ந்த நிறுவனங்கள்.

ஆகவே சீனா நேரடியாக அவர்களுடைய கட்டுப் பாட்டில் இருக்கும் வங்கிகளினுடைய கடனை கொடுக்காமல் அவர்களுடைய நிறுவனங்கள் வழியாக இலங்கைக்கு கடன் கொடுத்திருக்கி றார்கள். ஆகவே நேரடியாக நாம் யாரையும் சுட்டிக்காட்ட முடியாது. சீனாவை காரணம் காட்ட முடியாது. ஆனால் இலங்கை பெரியளவில் ஏமாந்துகொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமே



DITS: PTI/ TWITTER-@CHINAEMBSL/ AP

தெரிகிறது. தற்பொழுது இலங்கை sri lanka backdoor என்று சொல்லி மேற்குலக நாடுகள் அழைக்கிறார்கள். இலங்கையின் கதவு சீனாவினுடைய பின்வாசல் ஸ்ரீலங்கா என்று சொல்கின்றார்களா? என்றால் இல்லை. ஆசிய நாடுகளுக்குள் சீனாவால் நுழையக்கூடிய ஒரு இடம் ஒரு வாசல் எது என்று கேட்டால் இலங்கை தான். சீனாவின் நுழைவாயிலாகத் தான் இலங்கையை பார்க்கின்றதே தவிர இலங்கைக்கு சீனாவால் நன்மைகள் நடக் கின்றதா என்று கேட்டால் இலங்கைக்கு சீனாவால் பெரிய ஆபத்துகள் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது.

அடுத்ததாக தடுப்பூசி (Vaccine) உருவாக் கக்கூடிய தொழி ற்சாலையை இலங்கைக்கு கொண்டுவரப்போகின்றார்களாம். தடுப்பூசி (Vaccine) என்று சொல்லும் போதே அதற்கு தேவையான தொழினுட்பங்கள் அதிலிருந்து வரக்கூடிய கழிவுகள் இதை தாங்குவதற்கு ஒரு இடம் இருக்கின்றதா என்று கேட்டால் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு இடையே ஒரு 400 ஏக்கர் நிலப்பரப்பு இதற்காக தனிப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்டிருப்பதாக சொல்லுகின்றார்கள். ஆகவே சீனாவினுடைய தொழிற்சாலை கழிவுகளை போடக் கூடிய இடமாக இலங்கை அந்த தீவு மாற்றப்படப் போகிறது. இலங்கை என்று சொன்னாலே அதுவொரு தீவு நாடு இங்கு பெரியளவிலான நிலப்பரப்பு எல்லாம் கிடையாது. இந்த தீவு நாடடிற்குள் இந்த மாதிரியான தொழிற்சாலை கள் அதுவும் மருத்துவ கழிவுகள் நிறையக் கூடிய தொழிற்சாலையை கொண்டுவரும் பொழுது அதன் பின்னால் இருக்கின்ற பிரச்சனைகளை பற்றி இலங்கை கொஞ் சமாவது சிந்தித்திருக்கிறதா என்று கேட்டால் தெரியவில்லை.

ஆனால் அந்த தொழிற்சாலையை தொடங்கு வதற்காக இவர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால் சிறிதளவாக பணம் வேண்டு கிறார்கள் கிட்டத்தட்ட 350 மில்லியன் அமெ ரிக்க டொலர் சீனாவிடமிருந்து இலங்கைக்கு கடந்த 2 வாரத்திலேயே கைமாரியிருக்கிறது. எதற்காக என்று கேட்டால் இல்லை நாங்கள் ஒரு ஒப்பந்தம் போட்டிருந்தோம் ஏப்ரல் 2020 இல் இருந்து மார்ச் அளவில் ஒரு பில்லியன் அளவு க்கான அமெரிக்கன் டொலரை உதவிக்காக நாங்கள் இலங்கைக்கு கொடுப்போம் என்று சொன்னார்கள். உதவி என்று சொன்னால் இலவசமாக கொடுக்க வேண்டும். ஆனால் இவர்கள் செய்யும் உதவிகள் அனைத்து மே கடன் மீது கடன் வாங்கிக்கொண்டிருக் கிறார்கள். அந்த கடனின் வட்டியை கட்டுவ தற்காக மறுபடியும் அங்கிருந்தே கடன் வாங்க ப்படுகின்றது. ஒரு 400 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் இந்தியாவிற்கு கொடுக்க வேண்டியதாக இருந்தது. அந்த கடனை சீனாவிடமிருந்து வாங்கி இலங்கை அரசா ங்கம் இந்தியாவிற்கு கொடுத்தது. என்ன காரணம் என்று கேட்டால் எங்களது தேவை க்கு அதிகமாக பணம் வந்துவிட்டது அதனால் நாங்கள் இந்தியாவின் கடனை தீர்க்கின்றோம் என்று சொன் னார்கள். அதே இலங்கை ஐந்து மாதமளவில் எங்கள் நாட்டுக்குள் பொருளா தார அவசர நிலை அறிவிக்கின்றோம் என்று சொன்னார்கள். இலங்கையில் டொலர் கையிருப்பு கிடையாது. இலங்கையில் போது மான பணம் தற்போதைக்கு வராமல் இருக்கின்றது இலங்கை நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி -3.6 ஆக இருக்கின்றது நன்றாக கவனித்துக்கொள்ளுங்கள் இலங்கை யினுடைய பொருளாதார வளர்ச்சி -இல் சென்றுகொண்டிருக்கின்றது. -இல் சென்று கொண்டிருக்கும் இந்த பொருளாதார வளர்ச்சி இன்னும் ஒரு வருடம் இப்படியே நீண்டு கொண்டிருக்குமானால் இலங்கை மொத்த பாதிப்படைந்துவிடும். அவர்கள் வருமானத் தை விட கடனை கட்டுவதற்காக கூடுதலான தொகையை உருவாக்க வேண்டியதாக இருக்கும். அசல் தொகை கிடையாது வட்டி மட்டும் அப்படியில்லையா ஒட்டுமொத்த இலங்கையையும் அவர்கள் குத்தகைக்கு கொடுக்க வேண்டியதாக இருக்கும். 6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை கொடுக்க முடியாமல் அம்பாந்தோட்டை துறை முகம் அதை சுற்றி இருக்கின்ற 1000 கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை சீனாவிற்கு நாம் கொடுத் தோமோ அதே போன்று பல இடங்களை இலங்கை அரசாங்கம் சீனாவிற்கு கொடுக்க வேண்டியதாக இருக்கும். இது எல்லாமே வரக்கூடிய நாட்களில் இலங்கை அரசாங்கம் கொஞ்சமாக யோசிக்க வேண்டிய தருணங்கள் என்று சொல்லலாம்.

இந்த யோசனையை சரியாக இந்த அரசாங்கம் செய்கின்றதா என்று கேட்டால் இங்கு தான் நாங்கள் உங்களுக்கு உதவுகின்றோம் எங்களது மாதிரியான ஆட்சியை நீங்கள் நடத்துங்கள் என்று சீனா இலங்கைக்கு ஒரு அழைப்பை கொடுத்தது. சீனவியுடைய மாதிரி என்றால் கம்னீசியத்தில் லெனினிஸ்ட் என்னும் கொள்கை இருக்கின்றது. அந்த கொள்கை வழியாக இலங்கையில் நீங்கள் உங்களுடைய ஆட்சியை நடத்துங்கள். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் உங்களது குடும்பத் திடமே இந்த கட்டுப்பாட்டை வைத்துக்கொள்ள வேண்டும். அதனால் 8 நபர்கள் உங்கள் குடும்பத்தின் சார்பாக இலங்கையை ஆழட்டும் என்று திட்டத்துடன் அங்கிருந்து வந்திருக்க லாம். சீனாவை பொறுத்தவரை ஒரேயொரு கட்சி தான் வேறு எந்த கட்சியும் கிடையாது. தற்பொழுது இந்தியாவில் ஒரு எதிர்க்கட்டி ஒரு ஆளும் கட்சி என்று இருக்கும் பொழுது சீனாவில் ஒரு கட்சி தான். அந்த ஒரு கட்சியில் இருக்கின்ற 14 நபர்கள் எடுக்கக்கூடிய முடிவுகள் தான் இங்கு முக்கியமான முடிவுகளாக பார்க்கப் படுகின்றது. அதே மாதிரி இலங்கையில் ராஜபக்ச குடும்பம் ஒரு 8 பேர் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் எடுப்பது மட்டும் தான் இங்கு முடிவாக இருக்கின்றது. அவர்கள் நல்லபடியாக தான் இருக்கின்றார்கள். கடன் வாங்குகின் றார்கள் செல்வசெழிப்பாக இருக்கின்றார்கள் எல்லாமே அவர்களின் சொந்த ஊரிலே தான் நடந்து கொண்டிருக்கின்றது. அம்பாந்தோட்டை என்று சொல்லும் பொழுது ராஜபக்ச அவர்களு டைய சொந்த ஊர் தான்.

விக்கி

12ஆம் பக்கம் பார்க்க...

11ஆம் பக்க தொடர்ச்சி...

இந்த வீட்டினில் அவர்களுக்கு தேவையான பணத்தை முதலீடு செய்து அவர்களின் சொந்த தேவைகளுக்காக இவற்றை எடுத்துக்கொள்ளுகின்றார்கள்.

ஆனால் இன்று இலங்கை மக்கள் வரிசையில் நிற்கின்றார்கள். நிறைய பேர் சொல்கின்றார்கள் நான் வரிசையில் நிற்கவில்லை பொய் செய்தியை பரப்ப வேண்டாம் என்று சொல்கின்றனர். ஆனால் அதற்கு கீழ் 10 நபர்கள் நீ வேண்டும் என்றால் வரிசையில் நிற்காமல் இருக்கலாம், நாங்கள் நிற்கின்றோம். தேனீர் குடித்து எவ்வளவு நாளாகிவிட்டது தெரியுமா சீனி 1 கிலோவின் விலை 230 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரை விற்கின்றது என்று சொல்கின்றார்கள். இந்தளவுக்கு கொடூரங்கள் இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதிலிருந்து எப்படியாவது இலங்கை தப்ப வேண்டும் என்றால் சீனாவின் பிடியிலிருந்து முதலில் நீங்கள் வெளியில் வாருங்கள்.

ராஜபக்சவாக இருக்கட்டும் அல்லது ராஜபக்சவிற்கு ஆதரவு தெரிவிக்கும் யாராக என்றாலும் இருக்கட்டும் உங்களது நாட்டினுடைய பொருளாதாரம் என்னவாக இருக்கின்றது உங்களது நாட்டினுடைய பொருளாதாரம் எதை நம்பி இருக்கி ன்றது சுற்றுலாவை நம்பி இருக்கின்றது. சுற்றுலா என்னும் பொழுது சீனா மட்டும் கிடையாது பிற நாட்டினரும் இந்த நாட்டிற்கு வரவேண்டும். மூடிஸ் என்னும் அமைப்பு இலங்கையினுடைய கடன் வாங்கும் திறனை அதிரடியாக குறைத்திருக்கின்றது. அதே மாதிரி பல இடங்களிலும் பல நாடுகளிலும் இலங்கையினுடைய கடன் என்பது மிகவும் லோவிற்கு சென்றுகொண்டிருக்கின்றது. இதை நாம் வேகமாக சரிபன்ன வேண்டும். இதற்காகத் தான் கைகம்னிச அறிக்கையை படியுங்கள் என்று நான் சொல்லுகின்றேன்.

மிலிந்த மொறகொட என்பவரின் அறிக்கை என்ன சொல்கின்றது என்றால் நாம் ஒரு பக்கமாக சாய்ந்திருக்கின்றோம். தயவு செய்து அப்படி சாயாதீர்கள். மூன்று நாடுகள் செய்ய வேண்டிய ஒரு அபிவிருத்தி இருந்தது. ஜப்பான் இலங்கை இந்தியா இந்த மூன்று நாடுகளும் இணைந்து தான் கொழும்பு துறை முகத்தில் கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி பண்ணலாம் என்று கூறி ஒரு ஒப்பந்தம் போட்டிருந்தார்கள். ஆனால் அந்த ஒப்பந்தம் சீனாவினுடைய வற்புறுத்தலின் பெயரில் இலங்கை அரசாங்கம் தன்னிச்சையாக இரத்து செய்கின்றது. ஜப்பானையும் கேட்கவில்லை இந்தியாவையும் கேட்கவில்லை. இவற்றையெல்லாம் நாம் மாற்ற வேண்டும்.இவ்வாறான தப்புகள் நடந்தால் இலங்கையினுடைய கைக்கமினிசம் அவர்களின் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

ஆகவே இலங்கையை தப்பு சொல்கின்றோம் என்று மட்டும் நீங்கள் நினைக்காதீர்கள். இலங்கையை தப்பு சொல்லவில்லை. இது இலங்கைக்கும் தெரியாமல் சீனாவால் நகர்த்தப்படுகின்ற பலவிதமான காய் நகர்த்தல்கள் என்னடா உனக்கே இவ்வளவு தெரிகின்றது என்றால் அரசாங்கத்திற்கு எவ்வளவு தெரியும் என்று பலரும் கேட்கலாம். ஆனால் எனக்கு தெரிவது 10 நபர்களுக்கு தெரியவேண்டாமா?. புத்து நபர்கள் 100 நபர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டாமா?. அப்பொழுது தான் நாட்டை சுற்றி என்ன மாதிரியான நடவடிக் கைகள் அரசியல்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றது என்பது தெரியும்.

ஆகவே இந்த விடயத்தை உன்னிப்பாக கவனிப்பதற்கு இலங்கை மீது உங்களுக்கு உண்மையிலே கொஞ்சமாவது உறுத்து இருந்தால் இவற்றை வாசித்துப்பாருங்கள் மேலே சொல்வதில் எந்தளவு உண்மைகள் இருக்கின்றது என்பதை புரிந்துகொள்ளுங்கள். புரிந்த பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கு நாம் எவ்வாறான வேண்டுதல்களை வைக்கலாம் அல்லது ராஜபக்ச அரசாங்கத்திற்கு இதை எவ்வாறு கொண்டுபோகலாம் இவ்வாறு பல பிரச்சனைகள் இருக்கின்றது. கண்டிப்பாக பேசும் பொழுது இலங்கை அரசாங்கம் மக்களின் சார்பாக மாறுவதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றது.

ஆனால் அதற்கு நாம் பேச வேண்டும். நாம் பேசி எமது கேள்விகளை கேட்டு கருத்துக்களை பகிர்ந்தால் தான் மக்களுக்கு இவையெல்லாம் தெரிகின்றது என்று அவற்றை மாற்றிக் கொள்வார்கள். அப்படியில்லையா நாம் செய்வது தான் சட்டம் நாம் சொல்வதைத் தான் கேட்க வேண்டும் என்ற அடிமை ஆட்சி இலங்கையிலும் மலர்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதுவரை நாங்கள் அப்படித் தான் இருக்கின்றோம் என்று நீங்கள் சொன்னால் அடிமை என்னும் வார்த்தையை மாற்றி விட்டு அது எங்களுடைய உரிமை என்னும் வார்த்தையாக மாற்றுங்கள். உங்களுடைய உரிமை நீங்கள் கேட்டால் தான் கிடைக்கும்.

## கடுப்பேற்றும் கடி ஜோக்குகளை நீங்களும் தெரிந்துகொண்டு நீங்களும் மற்றவர்களை கடுப்பேற்றுங்கள்

**கங்கை ஆத்துல மீன் பிடிக்கலாம், காவிரி ஆத்துல மீன் பிடிக்கலாம் ஆனால் அய்யர் ஆத்துல மீன் பிடிக்க முடியுமா?**

**திருவள்ளுவர் 1330 குறள் எழுதியிருந்தாலும், அவரால் ஒரு குரலில்தான் பேச முடியும்.**

**என்னதான் உன் தலை சுத்தினாலும், உன் முதுகை நீ பார்க்க முடியுமா?**

**மீன் பிடிக்கிறவனை மீனவன் என்று சொல்லலாம்... நாய் பிடிக்கறவனை நாய்னு சொல்ல முடியுமா?**

**என்னதான் ஒருத்தன் குண்டா இருந்தாலும் அவனை துப்பாக்கிக்குள்ள போடா முடியாது.**

**தேன் கொட்டினா வலிக்கும் ... பாம்பு கொட்டினா வலிக்கும்... முடி கொட்டினா வலிக்குமா?**

**ஸ்கூல் டெஸ்ட்ல பிட் அடிக்கலாம், காலேஜ் டெஸ்ட்ல பிட் அடிக்கலாம்... பிளட் டெஸ்ட்ல பிட் அடிக்க முடியுமா?**

**பொங்கலுக்கு கவர்மெண்ட்டுல லீவு கொடுப்பாங்க... ஆனா இட்லி, தோசைக்கு கொடுப்பாங்களா?**

**லைப்ல ஒன்னுமே இல்லனா போர் அடிக்கும். தலையில ஒன்னுமே இல்லனா கிளார் அடிக்கும்**

**ஏழு பரம்பரைக்கு உக்காந்து சாப்பிட பைசா இருந்தாலும், பாஸ்ட் ஃபுட் கடையில நின்னுக் கிட்டுதான் சாப்பிடனும்...**

# வாழ்க்கை தத்துவங்கள் பொன்மொழிகள்

பேராசை கொண்டவன் எதிலும் திருப்தி அடைய மாட்டான். திருப்தியே மேலான செல்வம்.

ஐம்புலன்களுக்கு அடிமையாவது நல்லதல்ல. அவற்றை ஆட்சி செய்யும் நிலைக்கு மனிதன் உயர வேண்டும்.

எந்த செயலில் ஈடுபட்டாலும் அதன் விளைவாக இன்பமும் துன்பமும் இணைந்தே உண்டாகும்.

பிறரிடம் கையேந்துபவனை விட பிறருக்கு உதவ மனமில்லாமல் இல்லை என்று மறுப்பவனே இழிந்தவன்.

உடல் தூய்மையை விட மனத்தூய்மையே அவசியமானது. இதயத்தை நல்ல எண்ணத்தால் நிரப்பு.

பிறரின் இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள். மற்றவர் துன்பத்தில் பங்கேற்று உதவி செய்.

பொருள் இல்லாதவன் ஏழையல்ல. எப்போதும் மனதில் ஆசையைச் சுமந்து திரிபவனே ஏழை.

அறிவு என்னும் கதவு திறந்தால் மட்டுமே அறியாமை என்னும் திரை அகலும்.

ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போல நல்லவனும் ஒரு தீய குணத்தால் ஒழுக்கமற்றவனாக ஆகி விடுவான்.

பிறருடைய குற்றம் காண்பதிலும் பிறரைக் குறை சொல்வதிலும் நேரத்தை செலவிடாதீர்கள்.

மேடு பள்ளம் நிறைந்தது தான் உலகம். அதுபோல இன்ப துன்பம் நிறைந்தது தான் மனித வாழ்க்கை.

மனிதனின் உடன்பிறந்த இயல்பு ஆசை. அதை படிப்படியாக திருத்திக் கொண்டால் மட்டுமே வாழ்வில் உயர முடியும்.

யாரையும் வெறுப்பது கூடாது. அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். தனித்து வாழாதீர்கள். மனம் விட்டு பிறரிடம் பழகுங்கள்.எல்லாருக்கும் மதிப்பளிப்பதோடு, அவர்களின் வாழ்வில் குறுக்கிடாமல் இருப்பதே சிறந்த நாகரிகம்.

நல்லவர்களுடன் நட்பு கொள்ளுங்கள். நல்லறிவு தரும் நூல்களைப் படியுங்கள்.

நாக்கைக் கட்டுப்படுத்தினால் உள்ளத்தையும், உடலையும் எளிதாக வசப்படுத்த முடியும்.

பெற்ற தாயைப் போற்றுங்கள். அவளின் தியாகமே உங்களை ஆளாக்கியது என்பதை மறவாதீர்கள்.

கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம் இருந்து விட்டால் நம் வாழ்வே சொர்க்கமாக மாறி விடும்.

நடந்ததையே எண்ணி வருந்தாதீர்கள். நிகழ்காலத்தைப் பயனுடையதாக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

நல்லது கெட்டதை பகுத்தறியும் விவேகத்தைக் கற்றுக் கொடுப்பதே உண்மையான கல்வியாகும்.

செய்யப் போவதையே சொல்லுங்கள். சொன்னதையே செயல்படுத்துங்கள்.

மனிதன் கடமையில் பொறுப்புடன் இருந்தால், அதற்குரிய நற்பலன் கிடைத்தே தீரும்.

பூமிக்கு வரும் போது நாம் எதையும் கொண்டு வரவும் இல்லை. போகும் போது எதையும் கொண்டு போகவும் முடியாது.

பிறருக்கு துன்பம் ஏற்படாத வகையில் உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

இன்றைய சிறப்பான செயல்பாடுகளே, எதிர்கால வாழ்க்கைக்கு ஆணி வேராக இருக்கிறது. ஆரோக்கியமான வாழ்க்கையே உறுதியான வாழ்க்கை.

நன்றி உள்ளவனே நல்லவன். தன்னை உணர்ந்தவன். ஒருவர் செய்த நன்றியை மறப்பது பாவத்திலும் பாவம்.

உன் பலவீனம் தான் உன்னை அசுரத்தன்மை உள்ளவனாகவும், கோபக்காரனாகவும் மாற்றுகிறது. அதை அறிந்து துரத்தி விடு.

நல்லவர் நட்பை விட சிறந்த துணை வேறில்லை. நேர்மையாக நடப்பதைக் காட்டிலும் சிறந்த வழிபாடு இல்லை.



# அறிவியல் உலகம்



## உலகின் பெரிய காற்றாலை!

காற்றாலை தயாரிப்பில் தற்போது சீனா முன்னணிக்கு வந்து இருக்கிறது. அமெரிக்காவின் ஜி.ஈ., நிறுவனம் தயாரித்த 'ஹாலியாடே - எக்ஸ்' என்ற ராட்சத காற்றாலையைவிட பெரியதை சீனா தயாரித்துள்ளது. 'மிங்யாங் ஸ்மார்ட் எனர்ஜி' நிறுவனம் தயாரித்துள்ள காற்றாலையின் பெயர், 'மைசே' (MySE). ஒரு மைசே காற்றாலை 16 'மெகாவாட்' மின்சாரத்தை தயாரித்து 20ஆயிரம் வீடுகளுக்கு வழங்கும் திறன் கொண்டது.

இது கடலில் மிதந்தபடி, கடற்காற்றில் மின்சாரம் தயாரிப்பதற்காகவே உருவாக்கப்பட்டது. அடிப் பகுதியில் இருந்து 242 மீட்டர் உயரம் எழுந்து நிற்கும் மைசே காற்றாலையின் ஆயுள் 25 ஆண்டுகள் நீடிக்கும் என இதன் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வரும் 2022ல் ஒரு மைசே காற்றாலை வெள்ளோட்டத்திற்கு வரவுள்ளது. அது வெற்றி கண்டதும், அடுத்தடுத்த ஆண்டுகளில், பிரம்மாண்ட காற்றாலைகளை மிங்யாங் கடலில் மிதக்கவிடவுள்ளது. அப்படி மிதக்கும்போது, 118 மீட்டர் நீளமுள்ள மூன்று விசிறிகளும் சுழலும்போது, அவற்றின் பரப்பளவு மட்டும் ஆறு கால்பந்து மைதானங்கள் அளவுக்கு பரந்து இருக்கும்.

சீன ஆராய்ச்சியாளர்களின் கணக்குப்படி, கடலில் மிதக்கும் காற்றாலைகளின் அளவு பெரியதாக இருக்கும் பட்சத்தில், அவற்றில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான செலவு, படிப்படியாக குறையும் என்று தெரியவருகிறது. எனவேதான், கடல்பரப்பை அதிகம் கொண்ட இந்தியா போன்ற நாடுகள் கடல் மிதவைக் காற்றாலைத் திட்டங்களில் அதிக கவனம் செலுத்தத் துவங்கியுள்ளன.



## மனித தோலில் செய்த பிளாஸ்திரி!



நாள்பட்ட புண்கள் மீது, செயற்கை 'பிளாஸ்திரி' போடுவது எல்லோருக்கும் ஏற்றதல்ல. பலருக்கு ஒவ்வாமை ஏற்படும். எனவேதான், ஜெர்மனியிலுள்ள 'பிரான்ஹோபர் இன்ஸ்டிடியூட்டின்' மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், புது விதமான பிளாஸ்திரியை உருவாக்கியுள்ளனர்.

அது முற்றிலும் மனித தோலில் இருந்து எடுத்த புரதங்களை வைத்தே தயாரிக்கப் பட்டது. மனித தோலுக்கு, இழுவைத் தன்மையைத் தரக்கூடியது 'எலாஸ்டின்' என்ற உயிரி பாலிமர். எலாஸ்டினுக்குள் உள்ள புரதக் கட்டமைப்பின் பெயர் 'ட்ரோபோ எலாஸ்டின்.' இந்த புரதத்தை வைத்து, 'எலக்ட்ரோ ஸ்பின்னிங்' முறையில் மிக மெல்லிய ட்ரோபோஎலாஸ்டின் நேனோ இழைகளை விஞ்ஞானிகள் தயாரித்தனர். இந்த இழைகளை நெய்து, பிளாஸ்திரி போன்ற பெரிய பட்டைகளை ஜெர்மனிய ஆய்வாளர்கள் தயாரித்தனர்.

இந்த பட்டை, மனித தோலுக்கு மிகவும் ஏற்றதாக, தூக்கி எறிந்தால், விரைவில் மட்கும் தன்மை உடையதாக இருப்பதாக, முதற்கட்ட சோதனைகளில் தெரிய வந்துள்ளது.சர்க்கரை நோய், தோல் அல்சர் போன்ற நோய்களால் பாதிக்கப்பட் டோருக்கு, ட்ரோபோஎலாஸ்டின் பிளாஸ்திரிகள், நோய்தீர்க்கும் மருந்தாக அமையும்.

## அசத்தல் வட்ஸ்அப் அப்டேட்

வட்ஸ்அப் செயலியில் உருவாக்கப்பட்டு வரும் புது அம்சங்களின் விவரங்கள் இணையத்தில் வெளியாகி உள்ளன.

பேஸ்புக்கின் வட்ஸ்அப் செயலியில் வழங்கப்பட இருக்கும் புது அம்சங்கள் பற்றிய விவரங்கள் வெளியாகி உள்ளன. அதன்படி பயனர்கள் தங்களின் வட்ஸ்அப் ஸ்டேட்டஸ், லாஸ்ட் சீன் மற்றும் ப்ரோபைல் புகைப்படத்தை குறிப்பிட்ட சில காண்டாக்ட்களுக்கு மட்டும் மறைத்து வைக்க செய்யும் அம்சம் உருவாக்கப்படுகிறது.

தற்போது இவற்றை யாருக்கும் வேண்டாம் (no one), அனைவருக்கும் (everyone) மற்றும் காண்டாக்ட்களுக்கு மட்டும் (only contacts) என மூன்று ஆப்ஷன்கள் மட்டுமே வழங்கப்பட்டு இருக்கிறது. இவற்றில் குறிப்பிட்ட சில காண்டாக்ட்களை மட்டும் தேர்வு செய்யும் வசதி இதுவரை வழங்கப்படவில்லை.

புதிய அம்சம் வட்ஸ்அப் செயலியின் பீட்டா பதிப்பில் இடம்பெற்று இருக்கிறது. அந்த வகையில் விரைவில் இந்த அம்சம் வட்ஸ்அப் செயலியின் ஸ்டேபில் பீட்டாவில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## இரு ஸ்மார்ட்போன்கள் விலையை திடீரென மாற்றிய சம்சங்

சம்சங் நிறுவனத்தின் கெலக்ஸி எம் சீரிஸ் மற்றும் எப் சீரிஸ் ஸ்மார்ட்போன் விலை மாற்றப்பட்டு இருக்கிறது.

சம்சங் நிறுவனம் தனது கெலக்ஸி எம்12 மற்றும் எப்12 ஸ்மார்ட்போன்கள் விலையை இந்தியாவில் உயர்த்தி இருக்கிறது. இரு ஸ்மார்ட்போன்கள் விலை ரூ. 500 அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. கெலக்ஸி எம்12 மற்றும் கெலக்ஸி எப்12 ஸ்மார்ட்போன்களின் விலை ஆன்லைன் மற்றும் ஆப்லைன் வலைதளங்களில் மாற்றப்பட்டது.

புதிய விலை விவரம்

சாம்சங் கேலக்ஸி எம்12 4 ஜிபி 64 ஜிபி ரூ. 11,499
சாம்சங் கேலக்ஸி எப்12 4 ஜிபி 64 ஜிபி ரூ. 11,499

சாம்சங் ஸ்மார்ட்போன்

முன்னதாக இரு ஸ்மார்ட்போன்களின் விலை ரூ. 10,999 என நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. கேலக்ஸி எப்12 4 ஜிபி, 128 ஜிபி விலை ரூ. 12,499 ஆகும்.

அம்சங்களை பொருத்தவரை கேலக்ஸி எம்12 மாடலில் 6.5 இன்ச் டிஸ்ப்ளே, எக்சைனோஸ் 850 பிராசஸர், 48 எம்பி குவாட் கேமரா சிஸ்டம், 8 எம்பி செல்பி கேமரா, 6000 எம்.ஏ.ஹெச். பேட்டரி வழங்கப்பட்டு இருக்கிறது.

சாம்சங் மட்டுமின்றி ரியல்மி மற்றும் ரெட்மி நிறுவன ஸ்மார்ட்போன்களின் விலையும் சமீப காலங்களில் பலமுறை மாற்றப்பட்டன. அந்த வகையில் ரியல்மி ஸ்மார்ட்போன்கள் விலை ரூ. 1500 வரை உயர்த்தப்பட்டது.





# விளையாட்டு செய்திகள்



## டோக்கியோ பராலிம்பிக் போட்டிகள் நிறைவடைந்தன: 41 தங்கங்களுடன் சீனா முதலிடத்தில்

ஜப்பான் டோக்கியோவில் இடம்பெற்ற பராலிம்பிக் போட்டிகள் நிறைவடைந் துள்ளன.

இந்த நிலையில் இலங்கை பராலிம்பிக் போட்டிகளில் முதன் முறையாக தலா ஒரு தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை பெற்று 57 ஆவது இடத்தினை பெற்றுக்கொண்டது.

அதேவேளை, 'டோக்கியோ பராலிம்பிக் 2020' நிறைவடைந்த நிலையில் சீனா 96 தங்கம் 60 வெள்ளி 51 வெண்கல பதக்கங்களை பெற்று முதலாவது நிலையில் உள்ளது.

பெரிய பிரித்தானியா 41 தங்கம், 38 வெள்ளி மற்றும் 45 வெண்கலப் பதக்கங்களை பெற்று இரண்டாவது இடத்திலும், அமெரிக்கா 37 தங்கம் 36 வெள்ளி மற்றும் 31 வெண்கல பதக்கங்களை பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளது.

இந்த நிலையில் அடுத்த பராலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 2024 ஆண்டு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

| | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|
| CHN | 96 | 60 | 51 | 207 |
| GBR | 41 | 38 | 45 | 124 |
| USA | 37 | 36 | 31 | 104 |
| RPC | 36 | 33 | 49 | 118 |
| NED | 25 | 17 | 17 | 59 |

## ஆப்கான் மகளிர் அணியை தடை செய்தால் ஆடவர் டெஸ்ட் போட்டியை ரத்து செய்வோம் – அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியாளர்கள் பெண்களை கிரிக்கெட் விளையாடுவ தற்குத் தடை செய்தால், ஆப்கான் ஆடவர் அணியுடன் கிரிக்கெட் விளையாடும் திட்டத்தை ரத்து செய்வோம் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித் துள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறியபின், அந் நாட்டைத் தலிபான்கள் முழுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ள்ளனர். அங்கு இடைக்கால அரசு அமைக்கவும் முடிவு செய்து அமைச்சரவைப் பட்டியலை அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே பெண்களுக்கு உரிமைகள் முழுமையாக வழங்கப்படும் என அறிவி த்திருந்த தலிபான் அமைப்பினர், திடீரென பெண்கள் அரசியலில் பங்கேற்கத் தடை விதித்துள்ளனர். பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும் தடை விதி த்து, கிரிக்கெட் விளையாடவும் அனுமதி மறுத்துள்ளனர்.

தலிபான்கள் அமைப்பின் கலாசாரப் பிரிவின் துணைத் தலைவர் அஹமத்துல்லாஹ் வாசிக் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "பெண்கள் விளை யாட்டில் பங்கேற்பது அவசியமில்லை என்று கருதுகிறோம். குறிப்பாக கிரிக்கெட் விளையாடுவது தேவையற்றது.

கிரிக்கெட்டில் பெண்கள் பங்கேற்றால் அவர்களின் உடல், முகம் ஆகியவை மூடப்படாது. அனைவரும் பார்க்கும் வகையில் உடல் உறுப்புகள் தெரியக்கூடும்.

இதுபோன்று பெண்கள் ஆடை அணிவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. இப்போ துள்ள சூழலில் பெண்கள் கிரிக்கெட் மட்டுமல்ல எந்த விளையாட்டும் பாதுகாப்பா னது அல்ல" எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், வரும் நவம்பர் மாதம் ஆப்கானிஸ்தான் ஆடவர் அணி அவுஸ்ரேலியாவில் சென்று கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது. ஆப்கானில் மகளிர் கிரிக்கெட் விளையாடத் தலிபான்கள் தடை விதித்தால், ஆடவர் அணியுடன் விளையாடும் திட்டத்தை ரத்து செய்வோம் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிவிப்பில், "மகளிர் கிரிக்கெட் என்பது கிரிக்கெட் சபைக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

கிரிக்கெட்டைப் பொறுத்தவரை அனைவரும் பங்கேற்க வேண்டும் என்பதுதான் எங்கள் கண்ணோட்டம். எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் பெண்களும் கிரிக் கெட் விளையாட ஆதரவு தருவோம்.

ஆனால், ஆப்கானிஸ்தானில் பெண்கள் கிரிக்கெட் விளையாடத் தடை விதிக்கப்பட் டிருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி வருகிறது.

பெண்கள் கிரிக்கெட்டைத் தலிபான்கள் தடை செய்தால், ஹோபர்ட்டில் நவம்பர் மாதம் ஆப்கான் ஆடவர் அணியுடன் அவுஸ்திரேலிய அணி, விளையாடும் கிரிக் கெட் போட்டியை ரத்து செய்வதைத் தவிர அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு வேறு வழியில்லை" எனத் தெரிவித்துள்ளது.

## தேசிய கபடி குழாத்தில் பங்கேற்கும் வடக்கின் வீராங்கனைகள்

வசதிகள் இல்லாவிட்டாலும் வாய்ப்புகள் கிடைத்தால் திறமையை நிரூபிக்கும் விளையாட்டு வீராங்கனைகள் பலரும் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றனர்.

அவ்வாறு திறமையை வெளிப்படுத்தி தேசிய கபடி குழாத்துக்கு தெரிவான வட மாகாணத்தைச் சேர்ந்த மூன்று வீராங்கனைகளின் தகவலே இது.

கிளிநொச்சியிலிருந்து 11 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பின்தங்கிய சிவநகர் கிராமத்திலிருந்து இலங்கை தேசிய கபடி குழாத்துக்கு 03 வீராங்கனைகள் தெரிவாகியுள்ளனர்.

பாஸ்கரநாதன் டனுஷா, விஜயகுமார் நிதுஷா, இதயரஞ்சன் தேனுஜா ஆகியோரே அந்த மூன்று வீராங்கனைகளாவர்.

இந்த மூவருமே சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்ப கல்வியைப் பயின்றவர்கள் என்பதுடன் தற்போது உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணிக்காக விளையாடும் வீராங்கனைகளாவர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் மேற்படிப்பை தொடர்ந்த பாஸ்கரநாதன் டனுஷா 2013 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கபடி விளையாட்டில் பிரகாசித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு முதல்தடவையாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி பாடசாலை மட்ட தேசிய விளையாட்டு விழாவில் கபடி போட்டியில் 20 வயது பிரிவில் சாம்பியனான போது விஜயகுமார் நிதுஷா கபடி அணிக்கு தலைவியாக இருந்து சாதித்ததுடன் சிறந்த பிடி வீராங்கனையாகவும் தெரிவானார்.

2018 ஆம் ஆண்டு 17 வயது பிரிவில் சிவநகர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தேசிய விளையாட்டு விழாவில் கபடி போட்டியில் சாம்பியனாவதற்கு இதயரஞ்சன் தேனுஜா முக்கிய பங்களிப்பு வழங்கியவராவார்.

வசதிகளே இல்லாது தேசிய கபடி குழாத்துக்கு தெரிவாகியுள்ள இந்த வீராங்க னைகளுக்கு உரிய ஊக்குவிப்பு மாத்திரமே அவசியமாகவுள்ளது.





# உலக பார்வை



## பிரம்மபுத்திரா நதியில் இரண்டு படகுகள் மோதி விபத்து: பலரை காணவில்லை

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில், பிரம்மபுத்திரா நதியில், இரண்டு படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பலர் காணாமல் போயுள்ளனர்.



குறித்த சந்தர்ப்பத்தில் அந்த இரு படகுகளிலும் சுமார் 100 பயணிகள் பயணித்துள்ளதாக தகவல்களை மேற்கோள்காட்டி, இந்திய ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், மாநில பேரிடர் மீட்பு படை அதிகாரிகள் மீட்புப் பணிகள் முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, ஒரு குழந்தை உட்பட சுமார் 30 பேர் இதுவரையில் மீட்கப்பட்டு, அவர்களில் பலர் வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

## ஆப்கானில் புதிய இடைக்கால அரசாங்கத்தை அமைத்தது தலிபான் அமைப்பு

ஆப்கானிஸ்தான் இனிமேல் "ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய இராச்சியம்" என்றே அழைக்கப்படுமென தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன், தலிபான்களால் அன்றைய தினம் (07) இடைக்கால அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஆப்கானிஸ்தானின் இடைக்கால பிரதமராக முல்லா மொஹம்மட் ஹஸ்ஸன் அகூந்த் (Mullah Mohammad Hassan Akhund) என்பவரை தலிபான் தலைமை அறிவித்துள்ளது.

ஹஸ்ஸன் அகூந்த், ஐக்கிய நாடுகள் சபையின் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றுள்ளாராவார்.

**ஆப்கானிஸ்தானின் புதிய இடைக்கால பிரதமர்** Mullah Mohammad Hassan Akhund

இந்த நிலையில், பொதுவெளிக்கு பெரிதாக தோன்றாத இடைக்கால பிரதமர் அகுந்த்ஸதா வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய விதிகள் மற்றும் ஷரியா சட்டத்தை அரசு பேணுமென தெரிவித்துள்ளார்.

தேசத்தின் உயரிய நலன்களை பாதுகாத்து, அமைதி, வளம், வளர்ச்சி தழைத்தோங்க பொறுப்பில் உள்ளவர்கள் பணியாற்ற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஷரியா சட்டத்திற்கு உட்பட்டு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான மதம் மற்றும் நவீன அறிவியல் சூழ்நிலைகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படும் என ஆப்கானிஸ்தானின் இடைக்கால பிரதமர் அறிவித்துள்ளார்.


இதேவேளை, முறைப்படி புதிய அரசு அமையும் வரை இடைக்கால அரசில் இடம்பெறுவோரை தலிபான் தலைமை அறிவித்துள்ளதாக அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, துணைப் பிரதமராக முல்லா அப்துல் கனீ பராதர், உள்துறை அமைச்சராக சராஜீதின் ஹக்கானி, பாதுகாப்பு அமைச்சராக முல்லா யாகூப் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தலிபான் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். இதில் உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சராஜீதின் ஹக்கானி, தலிபான் போராளிகள் ஆயுதக்குழுவில் கடுமையான பயிற்சி பெற்ற ஹக்கானி குழுவை நிறுவியவரின் மகன் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

புதிய அமைச்சரவையில் இதுவரை பெண்கள் எவருக்கும் இடமளிக்கப்படவில்லை என பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆப்கானிஸ்தானில் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள பின்புலத்தில் ஆயுதமேந்திய தலிபான்கள் ஆட்சியமைத்துள்ளனர். கடந்த மாதம் 15 ஆம் திகதி, தலிபான்களால் தலைநகர் காபூலில் தமது அதிகாரம் நிலைநாட்ட ப்பட்டது.

எவ்வாறாயினும், சுதந்திரமாக வாழ்வதற்குரிய உரிமையை பெற்றுத் தருமாறு கோரி ஆப்கான் மக்களால் தலிபான்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## பொதுமக்களிடம் மன்னிப்பு கோரிய ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி!


...nt by Mohammad Ashraf Ghani

...ber 8, 2021

...e Afghan people an explanation for leaving Kabul abruptly on August 15th after t... ...tedly entered the city. I left at the urging of the palace security who advised me... ...risked setting off the same horrific street-to-street fighting the city had suffered ... War of the 1990s. Leaving Kabul was the most difficult decision of my life, but I... ...I it was the only way to keep the guns silent and save Kabul and her 6 million citi... ...voted 20 years of my life to helping the Afghan people work toward building a ...atic, prosperous, and sovereign state — it was never my intent to abandon the pe... ...ision.

...ot the moment for a long assessment of the events leading up to my departure - ... them in detail in the near future. But I must now address baseless allegations th... ...ul I took with me millions of dollars belonging to the Afghan people. These charg... ...ely and categorically false. Corruption is a plague that has crippled our country f... and fighting corruption has been a central focus of my efforts as president. I inh... ...er that could not easily or quickly be defeated.

... and I have been scrupulous in our personal finances. I have publicly declared all... My wife's family inheritance has also been disclosed and remains listed in her ho... ...of Lebanon. I welcome an official audit or financial investigation under UN auspi... ...er appropriate independent body to prove the veracity of my statements here. M... ...les are ready to submit their finances to public audit, and I would encourage and... ...rmer senior officials and political figures to do the same.

...out my life, I have firmly believed that the formula of a democratic republic was... ...y forward for a sovereign, peaceful, prosperous Afghanistan. Throughout my ser... ...try, the boundaries of my actions have always been defined and guided by the 2... ...tion of the Islamic Republic of Afghanistan. It provides the platforms for dialogu... ...ur differences can be managed through give and take and persuasion, and where... ...nce of a common vision for the future can be defined and embraced. Our Afghan... ...of Jirga and Shura is deeply egalitarian and participatory and can provide a platf... ...eful outcomes for the country moving forward.

...y profound appreciation and respect for the sacrifice of all Afghans, especially o... ...soldiers and their families, through the last forty years. It is with deep and profou... ...hat my own chapter ended in similar tragedy to my predecessors — without ens... and prosperity. I apologize to the Afghan people that I could not make it end ...tly. My commitment to the Afghan people has never wavered and will guide me ...ny life.

ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி அஷ்ரப் கானி (Ashraf Ghani), அந்நாட்டு பொதுமக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். ஐக்கிய அரபு இராச்சியத்தில் தஞ்சமடைந்துள்ள நிலையில், அவர் இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

தாலிபான்கள், கடந்த மாதம் 15 ஆம் திகதி தலைநகர் காபுலை கைப்பற்றியதையடுத்து, அப்போது ஜனாதிபதியாக பதவிவகித்த அஷ்ரப் கானி, ஆப்கானிஸ்தானிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு வெளியேறினார்.

இந்நிலையில், காபுலில் இருந்து வெளியேறியமை தமது வாழ்வில் மிக கடினமான முடிவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த தீர்மானத்தை வித்தியாசமாக முடிவுக்கு கொண்டு வர முடியாதிருந்ததாகவும் ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி அஷ்ரப் கானி தெரிவித்துள்ளார்.

தமது மக்களை கைவிட விரும்பவில்லை என்றும், ஆனால் அதுவே ஒரு வழியாக இருந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்தோனேசியாவின் Tangerang சிறைச்சாலையில் தீ

இந்தோனேசிய தலைநகர் ஜகர்த்தா நகருக்கு அருகாமையிலுள்ள Tangerang சிறைச்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 41 கைதிகள் உயிரிழந்துள்ளனர்.

தீ விபத்தின் போது அதிகமான கைதிகள் உறக்கத்தில் இருந்ததாக கூறப்படுகின்றது.

40 இற்கும் அதிகமானோர் தங்கக்கூடிய வசதி கொண்ட அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள Block C இல் 122 கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது உயிரிழந்த கைதிகளில் போர்த்துக்கல் மற்றும் தென் ஆபிரிக்காவை சேர்ந்த இருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த விபத்தில் 08 பேர் படுகாயமடைந்துள்ள அதேநேரம், பலர் காயமடைந்துள்ளதாக அமைச்சர் Yasonna Laoly தெரிவித்துள்ளார்.

## பிரான்ஸிலிருந்து பிரித்தானியா நோக்கி பயணிக்க முயன்ற 56 அகதிகள் மீட்பு!

பிரான்ஸிலிருந்து ஆங்கில கால்வாய் ஊடாக பிரித்தானியா நோக்கி, பயணிக்க முயன்ற 56 அகதிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கலைஸ், டன்கெர்க், பவுலோன் சுர் மெர் நகர கடற்பிராந்தியங்களில் ஒரே நாளில் நான்கு மீட்புப் பணிகளின் போது அவர்கள் மீட்கப்பட்டனர். மீட்கப்பட்டவர்களில் ஆறு சிறுவர்களும் நான்கு பெண்களும் அடங்குவர்.

சிறிய ஆபத்தான மீன்பிடி படகுகள் மூலம் குறித்த அகதிகள் பிரித்தானியா நோக்கி சென்ற போது கடற்பிராந்திய காவல்துறையினரால் இவர்கள் மீட்கப்பட்டனர்.

அண்மைய நாட்களில் பிரித்தானியா நோக்கி சட்டவிரோத பயணம் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் 21ஆம் திகதி ஒரே நாளில் 828பேர் கடல்மார்க்கமாக பிரித்தானியா நோக்கி படையெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# உலகை உலுக்கிய செப்டம்பர் 11 தாக்குதல் அமெரிக்காவின் நோக்கம் நிறைவேறியதா..!

அமெரிக்காவை மட்டுமல்ல, உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய, பயங்கரவாத சம்பவத்தின் 20 ஆண்டுகள் நிறைவு தினம் இன்று. 2001 செப்டம்பர் 11 அன்று காலை 8.45 மணிக்கு, அல் கொய்தா பயங்கரவாதிகள் உலக வர்த்தக மையத்தின் மீது விமானங்களை மோதியதில், அதன் இரண்டு கோபுரங்களும் சீட்டு கட்டை போல் நொறுங்கி விழுந்தன. நியூயார்க்கில் இரட்டைக் கோபுரத்தை அல்காய்தா பயங்கரவாத அமைப்பு, தாங்கள் கடத்திய விமானங்களை கொண்டு மோதி தகர்த்தது. இரண்டு விமானங்கள் இரட்டை கோபுரம் மீது மோதிய நிலையில், மூன்றாவது விமானம் அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகன் மீது மோதியது. இந்த தாக்குதலுக்கு அல் கய்தா இயக்கத்தின், ஒசாமா பின் லேடன் பொறுப்பேற்றார்.

2,983 பேரை பலிகொண்ட பயங்கரவாத தாக்குதலால் அமெரிக்கா நிலைகுலைந்தது. இந்த தாக்குதலுக்கு பின் அமெரிக்கா பயங்கரவாத எதிர்ப்பு போரை தொடங்கியது. அதில் முக்கிய நடவடிக்கையாக, 2011, மே முதல் திகதியன்று, பாகிஸ்தானில் பதுங்கி இருந்த, ஒசாமா பின் லேடனை, அமெரிக்காவின் பிளாக் ஹாக் ஹெலிகாப்டர் களில் சென்ற சுமார் 20 வீரர்கள், பின் லேடன் வீட்டு மாடியில் தரையிறங்கி அவரை சுட்டு வீழ்த்தினார்கள்.

அமெரிக்கவின் மீதான தாக்குதலுக்கு பிறகு அல்கொய்தா மற்றும் ஹக்கானி நெட்வொர்க் ஆகியவை ஒரே இரவில் அமெரிக்காவின் எதிரிகளாக மாறினார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக, அமெரிக்கா, தனது 20 ஆண்டு கால போருக்கு பிறகு, ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டை அதன் எதிரிகளான தாலிபான் (Taliban) மற்றும் ஹக்கானி குழுவில் ஒப்படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதலில், நேரிடையாக உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 3000. ஆனால் 75000 க்கும் மேற்பட்ட ஆப்கானிஸ்தான் வீரர்கள், 3000 க்கும் மேற்பட்ட கூட்டணிப் படையினர், மற்றும் பாதிக்கப் பட்ட எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட சிவில் மக்கள் என இந்த இந்த இருபது ஆண்டு போரில் விட்டு சென்றுள்ள தடயங்கள் ஏராளம். "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என்று தனது நாட்டு மக்களின் வரிப் பணத்தை கொண்டு பெரும் விலை கொடுத்த அமெரிக்கா, இப்போது பயங்கரவாதிகளின் பிடியில் ஆப்கானிஸ்தானை (Afghanistan) விட்டுச் சென்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில், அமெரிக்கா மீதான பயங்கரவாத தாக்குதலுக்காக, அல்கெய்தா பயங்கரவாதவாதிகளை அழிக்க களம் இறங்கிய அமெரிக்கா, இந்த 20-ம் ஆண்டு நினைவு தினத்தில், ஆப்கானிஸ்தானில் இருந்து முழுமையாக வெளியேறி விட்டது. ஆனால், இன்று ஆப்கானிஸ்தான், அதே பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியுள்ளது. அந்நாடு, தாலிபான்களின் பிடியில் சிக்கியிருப்பதோடு, உலகிற்கே அவர்கள் அச்சுறுத்தலாக மாறியுள்ளனர்.

பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தொடங்கிய போர், அதிகாரபூர்வமாக முடிந்துவிட்டாலும், தற்போது ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் கொடுங்கோல் ஆட்சி தொடங்கி அங்கு மிக மோசமான சூழ்நிலை நிலவுகிறது.



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 12.09.2021 அன்று வெளியிடப்பட்டது.